விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 226 வள்ளுவர் ஆண்டு 2054 ஆடி 17 புதன்கிழமை (02.08.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829


கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## யாழ்.பல்கலையில் புத்தர் சிலை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் விஞ்ஞான பீட வளாகத்தில் நேற்றைய தினம் புத்தர் சிலை வைக்கப்பட்டு பௌத்த கொடிகள் கட்டப்பட்டு வழிபாடுகள் இடம்பெற்றதால் அங்கு சிறிது நேரம் சலசலப்பு ஏற்பட்டது.

(02ஆம் பக்கம் பார்க்க)



பொலிஸ் அதிகாரங்களைத் தவிர்த்து

## 13ஆம் திருத்தத்தை எவ்வாறு அமுலாக்குவது

அடுத்த வாரம் சபையில் ஜனாதிபதி விசேட அறிக்கை

(கொழும்பு)

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தை வலுப்படுத்துவது தொடர்பான அனைத்து யோசனைகளையும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளார்.

இதன்படி, 13ஆவது அரசியலமைப்புத் திருத்தம் தொடர்பான அதிகாரப் பகிர்வு தொடர்பில் ஜனாதிபதி அடுத்த வாரம் பாராளுமன்றத்தில் விசேட அறிக்கையொன்றை வெளியிட உள்ளார்.

அரசியலமைப்பின் 13வது திருத்தத்தை வலுப்படுத்தும் வகையில் அது தொடர்பான கட்டளைச்சட்டங்களைகொண்டு வருவது குறித்தும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விளக்கமளிக்க 11

# 13ஆவது திருத்தத்தை அமுல்படுத்த ஜனாதிபதி ரணிலிடம் கூறியுள்ளோம்

## தமிழ் எம்.பிக்களிடம் இந்திய உயர்ஸ்தானிகர்

**(கொழும்பு) 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துமாறு ஜனாதிபதி ரணிலிடம் கூறியுள்ளோம் என இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் தமிழ் எம்.பிக்களிடம் தெரிவித்துள்ளார்.**

தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இந்திய தூதருக்குமிடையிலான சந்திப்பு நேற்று கொழும்பிலுள்ள இந்திய இல்லத்தில் நடைபெற்றது.

இந்தியத் தூதர் கோபால் பாக்லே, பிரதித் தூதர், அரசியல் விவகாரங்களுக்கான செயலாளர் உள்ளிட்டவர்கள் இதில் பங்கேற்றனர்.

இச்சந்திப்பில் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், எம்.ஏ.சுமந்திரன், சி.சிறீதரன், சாள்ஸ் நிர்மலநாதன், த.கலையரசன், செல்வம் அடைக்கலநாதன், கோவிந்தம் கருணாகரம் ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மையில் இந்தியாவுக்கு அழைக்கப்பட்டபோது, என்னென்ன விடயங்கள் இந்திய தரப்பினால் அறிவுறுத்தப்பட்டது என்பது குறித்து இந்திய தூதர் விளக்கமளித்தார்.

இரு நாட்டுக்குமிடையில் பாலம் அமைப்பது, மின்சக்தி இணைப்பு 11

## சுற்றுலா பயணிகளின் வருகை அதிகரிப்பு

(கொழும்பு)

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் தற்காலி 11

## மாகாண சபைத் தேர்தலை நடத்துமாறு அரசுக்கு அழுத்தம் கொடுங்கள்

### இந்திய உயர்ஸ்தானிகரிடம் தமிழ் எம்.பிக்கள்

(கொழும்பு)

இலங்கையில் மாகாண சபைத் தேர்தலை நடத்துமாறு அரசாங்கத்திற்கு அழுத்தங்களை பிரயோகிக்க வேண்டும் என தமிழ் எம்.பிக்கள் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லேயிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

13ஆவது சட்டத் திருத்தத்தை இலங்கையில் முழுமையாக நடைமுறைப்படுத்தி, மாகாண சபைகளுக்கான தேர்தல்களை 11

## வவுனியாவில் இளம் தாய் உயிரிழப்பு

(வவுனியா)

வவுனியா ஓமந்தையில் விபரீத முடிவெடுத்த இளம் தாய் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் 11

## கொழும்பில் விபத்து; மன்னார் இளைஞன் பலி

(கொழும்பு)

கொழும்பில் இடம்பெற்ற வாகன விபத்தில் மன்னாரைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இரத்மலானையில் நேற்று முன்தினம் இரவு 8.30 மணியளவில் கார் ஒன்றும்பாரவூர்தி ஒன்றும் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.

இதன் போது 11

## அத்தியாவசிய பிரச்சினைகளுக்கு மூன்று வருடங்களில் தீர்வு

### சம்பிக்க ரணவக்க தெரிவிப்பு



(கொழும்பு)

நாட்டின் அத்தியாவசியப் பிரச்சினைகளுக்கு மூன்று வருடங்களுக்குள் தீர்வு முன்வைக்கப்படும் என பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

11

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்.பல்கலை...

வழமையில் பௌர்ணமி தினத்தில் சிறிய புத்தர் சிலை ஒன்றை வைத்து பௌத்த சிங்கள மாணவர்கள் பிரார்த்தனை செய்வது வழக்கம்.

இருந்தும் நேற்றைய தினம் வழக்கத்துக்கு மாறாக, பெரிய புத்தர் சிலையை தூக்கி வந்து விஞ்ஞான பீடத்தில் வைத்ததுடன் அங்கு பௌத்த கொடிகளும் பறக்கவிடப்பட்டன.

இதன் காரணமாக ஏனைய மாணவர்களிடையே சலசலப்பு ஏற்பட்டது.

எனினும் குறித்த புத்தர் சிலை அங்கிருந்து மீண்டும் எடுத்துச் செல்லப்பட்டதையடுத்து நிலைமை சுமுகமாயின.

(ம-7,33,104)


தென்னந்தோட்டம் விற்பனைக்கு

புதிய தென்னை, கயூமரம், மாந்தோப்பு வயல் அடங்கலாக சகல வசதிகளுடன் 13 ஏக்கர் விற்பனைக்கு உண்டு. (16587)

077 873 0129

அல்லிப்பளை



வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு

076 636 3378

076 097 3127


## 23 வயது இளம் பெண் பருத்தித்துறையில் கைது

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறையில் ஆண்களுடன் தகாத உறவில் ஈடுபடும் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இளம்பெண்ணை பாலியல் தொற்றுநோய்யுள்ளாரா என பரிசோதிக்க பருத்தித்துறை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

திருமணமான 23 வயதான இளம் பெண்ணே பருத்தித்துறை, சாரையடி பகுதியில் நேற்று முன்தினம் அதிகாலை 1 மணியளவில் கைது செய்யப்பட்டார்.

அரியாலை, பூம்புகார் பகுதியை சேர்ந்த குறித்த இளம்பெண், பருத்தித்துறையில் நண்பியொருவருடன் தங்கியுள்ளார்.

குறித்த பெண் சமூகப் பிறழ்வில் ஈடுபடுகிறார் என்ற முறைப்பாடு பருத்தித்துறை பொலிஸாருக்கு கிடைத்து, இரண்டு முறை பொலிஸ் நிலையம் அழைக்கப்பட்டு எச்சரிக்கப்பட்டிருந்தார்.

அதன்பின்னர் மீண்டும் சமூகப்பிறழ்வில் ஈடுபட்ட சந்தேகத்தில் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டார். முச்சக்கர வண்டியொன்றுடன் அவர் நின்றபோது பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

கைதான பெண்ணுக்கு ஏற்கெனவே திருமணமாகி 3 வயதில் அவருக்கு குழந்தையுள்ளது. இந்நிலையில் மனைவியின் தகாத நடத்தையை அறிந்த கணவர் பிரிந்து சென்று விட்டார்.

தனது பிள்ளை தற்போது மாமனாரின் பராமரிப்பில் இருப்பதாக கைதான பெண் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து இரண்டு முறை எச்சரித்தும் திருந்தாமல் சமூகப் பிறழ்வில் ஈடுபட்டதால், அவரை யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் தடுத்து வைத்து, பாலியல் தொற்றுநோய் பாதிப்பிற்குள்ளாகியிருக்கிறாரா என பரிசோதிக்க வேண்டுமென பருத்தித்துறை பொலிஸார் விடுத்த கோரிக்கைக்கு நீதிமன்றம் அனுமதியளித்தது.

(ம-7)


துயர் பகிர்கின்றோம்



எம்மோடு சம காலத்தில் ஆசிரியப் பணியாற்றிய ஆசிரியை

செல்வி ஜெயரஞ்சனி செந்திவேல்

(ஓய்வுபெற்ற பிரதி அதிபர், யா/ யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை)

அவர்கள் மறைந்த செய்தி அறிந்து அதிர்ச்சியும் ஆழ்ந்த கவலையும் அடைகின்றோம். அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

(C-6992)

சம காலத்தில் அன்னாருடன் கற்பித்த தெல்லிப்பழை யூனியன் கல்லூரி முன்னாள் ஆசிரியர்கள்



சைவ வித்தியா விருத்திச் சங்கம்

உடன் வருகை நேர்முகம் (Walk-in Interview)

கீழ்க்காணும் பதவிகளுக்கு வருகை நேர்முகத் தேர்வு நடைபெறவுள்ளது.

I. உள்ளகக் கணக்காய்வாளர் - முழு நேரம்/ பகுதிநேரம்
II. உபவிடுதிக் காப்பாளர் (பெண்) - முழுநேரம்/ பகுதிநேரம்
வயது 25 – 60
III. தொழிலாளர் (ஆண்) - இல்லம்(1), பண்ணை(1)
IV. தன்னார்வத் தொண்டர்கள் (இரு பாலாரும்)
வயது 18 – 60,
O/l கணிதத்துடன் 6 பாடம் சித்தி

- ஊதியம் மற்றும் வேலை நிபந்தனை விபரங்கள் நேரில் வழங்கப்படும்.
- முற்பகல் 9.00 - 12.00 அல்லது பி.ப 3.00 - 4.00 எமது அலுவலகத்துக்கு சான்றிதழ்களுடன் வருகை தரவும்.

(C-6993)

சைவ வித்தியா விருத்திச் சங்கம்
கலாசாலை வீதி, திருநெல்வேலி.
தொ.இல. : 021 222 6525, 077 076 7846

லோ.துஷிகரன்
செயலாளர்


# மரண அறிவித்தல்



## சிதம்பரி செல்வராசா

தோற்றம் 15.10.1935 மறைவு 30.07.2023

கும்பிழாவளை மேற்கு அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பரி செல்வராசா அவர்கள் 30.07.2023 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைவனடி எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற சிதம்பரி - கற்பகம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற கந்தையா - சின்னப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மருமகனும் தனலட்சுமியின் பாசமிகு கணவரும் அமரர் இராசம்மா, விசுவலிங்கம், சிகாமணி, மனோரஞ்சிதம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் நாகலிங்கம், பாலசிங்கம், குமாரசிங்கம் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் மேகலாதேவி(கனடா), ரேணுகாதேவி(இலங்கை), அமரர் தியாகராசா(இலங்கை), தேவராசா (பிரான்ஸ்), சுஜிதாதேவி(சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் திருமால்(கனடா), ஸ்ரீதரன்(இலங்கை), நிஸா(பிரான்ஸ்), சிவதாஸ் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் தசந்தியா, தனுஜன், தனோஜன், ஜெயதரன்(கனடா), கோகிசன், கபிசன், நிபிசன்(இலங்கை), ஆதனா, ஆதவன், ஆதிஸா, ஆதவி(பிரான்ஸ்), சினுஜன், சிவானுஜன், சாதுசன்(சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 02.08.2023 இன்று மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று அவரின் பூதவுடல் தகனக் கிரியைக்காக வைரவர் அடைப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

076 531 9519
074 046 0802

தகவல்:
குடும்பத்தினர்

(16584)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுகாதாரத்துறை முறைமைகளை மீளாய்வுக்குட்படுத்துங்கள்

## வடக்கு ஆளுநர் பணிப்பு

(யாழ்ப்பாணம்)

**வடக்கு மாகாணத்தின் சுகாதாரத்துறை முறைமைகளை மீளாய்வுக்குட்படுத்துமாறு ஆளுநர் பி.எச்.எம்.சாள்ஸ் பணிப்புரை வழங்கியுள்ளார்.**

வடக்கு மாகாணத்தில் சுகாதாரத் துறை முறைமைகள் பற்றிய கரிசனைகள் தொடர்பில், வடக்கு மாகாண ஆளுநரின் தலைமையில் வடக்கு மாகாண பிரதம செயலாளர், சுகாதார அமைச்சு செயலாளர், மாகாண சுகாதாரப் பணிப்பாளர், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள் மற்றும் வைத்திய அதிகாரிகளின் பங்குபற்றுதலுடன் நேற்று முன்தினம் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இதன்போதே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

மேலும் சேவை நாடுவோருக்கான சிகிச்சை, முகாமை மற்றும் புனர்வாழ்வு என்ற விடயங்கள் சுகாதார சேவை நிலையங்களில் ஒரே விதமாக நோக்கப்படலாகாது என்றும் அவை வெவ்வேறான முறைமைகள் ஊடாக அணுகவேண்டியவை என்பதை வலியுறுத்துவதாக ஆளுநர் தெரிவித்தார்.

வைத்தியர்களின் விடுப்பு நேர பதிலீடு, உணவு பாதுகாப்பு, வெளிநோயாளிகள் முறையாக மருந்துகளை பெற்றுக்கொண்டு அதனை கிரமமாக உபயோகிப்பதற்கான கண்காணிப்பு, அவசர அம்புலன்ஸ் வண்டிகளின் பராமரிப்பு, சுகாதார சேவைப் பணிமனைகளின் ஊடாக வழங்கப்படும் சேவைகள், உள்ளூராட்சிமன்ற சேவைகளில் சுகாதார சேவை பணி மனைகளின் காத்திரமான ஈடுபாடு என்பன எவ்வளவு வினைத்திறனாக நடைபெறுகின்றது என்பது பற்றியும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்களிடம் ஆளுநர் கேட்டறிந்ததுடன் அந்த முறைமைகளை அடிக்கடி மீளாய்வுக்குட்படுத்தி, பொது மக்களுக்கான சேவைகளை வினைத்திறனாக வழங்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

பாடசாலைகளில் சுகாதார நிலைமைகள்பற்றிக் கேட்டறிந்த ஆளுநர், அதிகாரிகள் பாடசாலைகளில் குடிநீர், சுகாதாரம், சுத்தம், ஆரோக்கியம் என்பவற்றில் அதிக கரிசனை கொள்ள வேண்டும் என்றும் தெரிவித்தார். (4-5-33-104)

# தையிட்டி விகாரைக்கு எதிராக நேற்றும் போராட்டம்



(அராலி)

தையிட்டி சட்டவிரோத விகாரைக்கு எதிரான 6 ஆவது கட்ட போராட்டம் நேற்று முன்தினம் ஆரம்பமாகிய நிலையில் நேற்று இரண்டாவது நாளாக முன்னெடுக்கப்பட்டது.

போராட்டகளத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், அக்கட்சியின் பொதுச் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன், கட்சியின் ஆதரவாளர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டுள்ளனர். (4-5-104)

# சாவகச்சேரி கல்வயலில் வீடு புகுந்து நகை, பணம் திருட்டு

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கல்வயல் கிராமத்தில் அமைந்துள்ள வீடொன்றில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை பிற்பகல் திருட்டு இடம் பெற்றிருப்பதாக சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வீட்டின் உரிமையாளர் வேலைக்குச் சென்றிருந்த நிலையில் அவரது மனைவி அருகில் உள்ள காணிக்கு ஆடு கட்ட சென்ற போது அதனை அவதானித்து வீட்டிற்குள் நுழைந்த திருடர்கள் ஒன்றரைப் பவுண் நகை மற்றும் கட்டட நிர்மாண பொருட்கள் வாங்க வைத்திருந்த இரண்டு இலட்சத்து 15 ஆயிரம் ரூபாய் பணம் ஆகியவற்றை திருடிக்கொண்டு தப்பித்துச் சென்றிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி திருட்டுச் சம்பவம் தொடர்பான சாவகச்சேரி பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற முறைப்பாட்டினை அடிப்படையாக கொண்டு பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (4-5-30)

# தொண்டைமானாறு செல்வச்சந்நிதி மஹோற்சவக் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - தொண்டைமானாறு ஸ்ரீசெல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 16 ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து மஹோற்சவ திருவிழாக்கள் இடம்பெற்று எதிர்வரும் 30 ஆம் திகதி தேர்த் திருவிழாவும் மறுநாள் 31 ஆம் திகதி தீர்த்த திருவிழாவும் இடம்பெறவுள்ளன.

இந்நிலையில் ஆலய மஹோற்சவ திருவிழா ஏற்பாடுகள் தொடர்பில், வடமராட்சி வடக்கு பிரதேச செயலாளர் ஆழ்வார்ப்பிள்ளை சிறி தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் தொடர்பில், பிரதேச செயலர் ஊடகங்களுக்கு செய்திகுறிப்பை அனுப்பி வைத்துள்ளார்.

குறித்த செய்திக் குறிப்பில், மஹோற்சவ காலத்தில் ஆலயச் சூழலில் ஒருவழிப்பாதை நடைமுறைப்படுத்தப்படும் என்பதுடன் போக்குவரத்து நெருக்கடி ஏற்படுவதனை தடுப்பதற்காக ஆலய பிரதான ஆற்றங்கரை பக்கத்தில் இருக்கின்ற பாதையின் ஊடாக முச்சக்கர வண்டிகள் மற்றும் மோட்டார் சைக்கிள்கள் என்பன வாகன தரிப்பிடத்திற்கு செல்ல முடியும்.

தொண்டைமானாறு ஆற்றில் முதலைகள் நடமாட்டம் காணப்படுவதால் ஆற்றில் இறங்குவதை தவிர்க்க வேண்டும்.

ஆலய பூசைகளின் போது ஆலய சுற்றாடலில் சுகாதார நடைமுறைகளை முறையாக பின்பற்ற தவறும் பட்சத்தில் அல்லது மீறுபவர்கள் மீது சுகாதார நடைமுறைகளின் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

ஆலய தேரோடும் வீதிகளில் நடைபாதை வியாபாரிகளுக்கும் தற்காலிக கடைகளுக்கும் அனுமதி மறுக்கப்பட்டுள்ளதுடன் மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

தனியார் காணிகளில் அமைந்திருக்கும் நிரந்தர கடைகளுக்கு அனுமதி வழங்கப்படும் என்பதுடன் புதிய கடைகளுக்கும் மற்றும் வீதியோர கடைகளுக்கும் ஆலய வீதியில் அமைக்கப்படுவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.

ஆலய மஹோற்சவ காலத்தில் உணவு நிலையங்கள் அமைக்கப்பட வேண்டி இருப்பின் அவ் உரிமையாளர் நாட்டின் எப்பாகத்திலாவது உணவு நிலையம் நடத்திய அனுபவம் மற்றும் மருத்துவ சான்றிதழை கொண்டிருத்தல் வேண்டும்.

உணவு நிலையங்களில் உணவினை கையாள்பவர்கள் மற்றும் அன்னதான மடங்களில் பணிபுரிபவர்கள் என அனைவரும் மருத்துவச்சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்.

உணவு நிலையங்களிற்கான குடிநீர் பொதுச்சுகாதார பரிசோதகரினால் அனுமதிக்கப்பட்ட இடத்தில் இருந்து பெறப்பட வேண்டும்.

தேர்த்திருவிழா அன்று தேர் வீதியுலா வரும் சமயத்தில் எதிர்கொள்ளும் நெருக்கடிகளை தவிர்ப்பதற்காக அந்த நேரத்தில் ஆற்றங்கரை வீதியூடாக வாகனங்கள் உள்நுழைவதற்கு தற்காலிகமாக அனுமதி மறுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-5-33)

## மீன் சந்தை கட்டட விவகாரம்

# காரைநகர் பிரதேச சபை முன்னாள் தவிசாளர் மீது தாக்குதல் முயற்சி

(யாழ்ப்பாணம்)

காரைநகர் ஆலடிச்சந்தியில், பிரதேச சபையின் அனுமதியின்றி சட்டவிரோத மீன் சந்தைக் கட்டடம் ஒன்று அமைக்கப்படுவதாக கடந்த 30 ஆம் திகதி கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டைத் தொடர்ந்து, பொலிஸாருக்கும் பிரதேச சபை செயலாளருக்கும், முன்னாள் பிரதேச சபைத் தவிசாளர் க.பாலச்சந்திரனால் முறைப்பாடு செய்யப்பட்டது.

இது சம்பந்தமாக உரிய நடவடிக்கை எடுக்கப்படாமையால் குறித்த பகுதிக்கு முன்னாள் தவிசாளர் நேற்று முன்தினம் காலை சென்றபோது அவர் மீது தாக்குதல் முயற்சி ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. தொடர்ந்து இது சம்பந்தமாக வட மாகாண பிரதம செயலாளரிடமும் முறையிடப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக பூரண அறிக்கை சமர்ப்பிக்குமாறு சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு பிரதம செயலாளர் உத்தரவிட்டதுடன் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் பிரதேச சபை செயலாளருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட கட்டடத்தை இடித்தகற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுவதாக முன்னாள் தவிசாளரிடம் பிரதம செயலாளர் உறுதியளித்தார். (4-5-33-104)

# பல லட்சம் பெறுமதியான முதிரை மரக்குற்றிகள் மீட்பு

## ஒருவர் கைது

(தருமபுரம்)

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புன்னை நீராவி பகுதியில் நேற்று முன்தினம் இரவு சிறப்பு அதிரப்படையினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய வீடொன்றில் மறைத்து வைக்கப்பட்ட நிலையில் பல லட்சம் ரூபாய் பெறுமதியான முதிரை மரக்குற்றிகளுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. (4-5-316)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆஷஸ் டெஸ்ட் தொடரை போராடி சமன் செய்தது இங்கிலாந்து அணி



இங்கிலாந்து, அவுஸ்திரேலியா மோதிய ஆஷஸ் டெஸ்ட் தொடரின் 5 ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி லண்டன் ஓவலில் நடைபெற்றது. டாஸ் வென்ற அவுஸ்திரேலியா பந்துவீச்சை தேர்வு செய்தது.

அதன்படி இங்கிலாந்து அணி முதலில் களமிறங்கியது. ஹாரி புரூக் மட்டும் பொறுப்புடன் ஆடி அரை சதமடித்து 85 ரன்னில் ஆட்டமிழந்தார். பென் டக்கெட் 41 ரன்னும், கிறிஸ் வோக்ஸ் 36 ரன்னும், மொயீன் அலி 34 ரன்னும் எடுத்தனர். இறுதியில் இங்கிலாந்து முதல் இன்னிங்சில் 54.4 ஓவரில் 283 ரன்களுக்கு ஓல் அவுட்டானது.

அவுஸ்திரேலியா சார்பில் மிட்செல் ஸ்டார்க் 4 விக்கெட்டும், ஹேசில்வுட், மர்பி தலா 2 விக்கெட் வீழ்த்தினர். இதையடுத்து ஆடிய அவுஸ்திரேலியா முதல் இன்னிங்சில் 295 ரன்களுக்கு ஓல் அவுட்டானது. ஸ்டீவ் ஸ்மித் 71 ரன்கள் எடுத்தார். இங்கிலாந்து சார்பில் கிறிஸ் வோக்ஸ் 3 விக்கெட்டும், பிராட், மார்க் வுட், ஜோ ரூட் தலா 2 விக்கெட் வீழ்த்தினர்.

12 ரன்கள் பின்தங்கிய நிலையில், இங்கிலாந்து 2வது இன்னிங்சை தொடங்கியது. இங்கிலாந்து 395 ரன்களுக்கு ஓல் அவுட்டானது. ஜோ ரூட் 91 ரன்னும், ஜானி பேர்ஸ்டோவ் 78 ரன்னும், சாக் கிராவ்லே 73 ரன்னும் எடுத்தனர். அவுஸ்திரேலியா சார்பில் மிட்செல் ஸ்டார்க், டாட் மர்பி ஆகியோர் தலா 4 விக்கெட் வீழ்த்தினர்.

இதையடுத்து, 384 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆஸ்திரேலிய அணி 2வது இன்னிங்சை ஆடியது. நான்காம் நாள்முடிவில் ஆஸ்திரேலியா 38 ஓவரில் விக்கெட் இழப்பின்றி 135 ரன்கள் எடுத்திருந்தது. டேவிட் வார்னர் 58 ரன்னும், உஸ்மான் கவாஜா 69 ரன்னும் எடுத்து ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தனர். இந்நிலையில், ஐந்தாம் நாள் ஆட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

249 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் அவுஸ்திரேலியா இறங்கியது. அணியின் எண்ணிக்கை 140 ஆக இருந்தபோது வார்னர் 60 ரன்னில் ஆட்டமிழந்தார். அவரை தொடர்ந்து உஸ்மான் கவாஜா 72 ரன்னில் அவுட்டானார். அடுத்து இறங்கிய லாபுசேன் 13 ரன்னில் வெளியேறினார். ஸ்டீவ் ஸ்மித் பொறுப்புடன் ஆடி அரை சதமடித்து 54 ரன்கள் எடுத்தார். அவருக்கு டிராவிஸ் ஹெட் நன்கு ஒத்துழைப்பு கொடுத்தார். ஹெட் 43 ரன்னில் அவுட்டானார்.

கடைசி கட்டத்தில் அலெக்ஸ் கேரி பொறுப்புடன் ஆடி 28 ரன்கள் எடுத்தார். இறுதியில், அவுஸ்திரேலியா 2 ஆவது இன்னிங்சில் 334 ரன்களுக்கு ஓல் அவுட்டானது. இதன் மூலம் 49 ரன்கள் வித்தியாசத்தில் இங்கிலாந்து போராடி வெற்றி பெற்றது. இதையடுத்து ஆஷஸ் தொடர் 2-2 என சமனில் முடிந்தது. (4)

# அயர்லாந்துக்கு எதிரான இருபது - 20 தொடர்

## கப்டனாக பும்ரா



இந்திய அணி அயர்லாந்துக்கு சென்று 3 இருபது - 20 போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகிறது.

ஒகஸ்ட் 18 ஆம் திகதி இருபது-20 தொடர் தொடங்குகிறது.

இந்நிலையில், அயர்லாந்து தொடருக்கான இந்திய அணியில் நட்சத்திர வீரர் பும்ரா சேர்க்கப்பட்டிருக்கிறார்.

சீனியர் வீரர்கள் பலருக்கு ஓய்வு அளிக்கப்பட்டுள்ள நிலையில், புதிய கப்டனாக பும்ரா நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

சி.எஸ்.கே. வீரர் ருத்ராஜ் துணை கப்டனாக நியமிக்கப்பட்டுள்ளார். இதேபோல் சி.எஸ்.கே. அணியின் ஷிவம் துபேவிற்கும் வாய்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது.

ஜெய்ஸ்வால், திலக் வர்மா, விக்கெட் கீப்பர் சஞ்சு சாம்சன், ஜித்தேஷ் சர்மா, சுழற்பந்து வீச்சாளராக வாஷிங்டன் சுந்தர், ஷபாஸ் அகமத், ரவி பிஷ்னோய் ஆகியோரும் அணியில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். (4)


# காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் நுணாவில் பகுதியில் 21 பரப்புக் காணி விற்பனைக்குண்டு**

**நிலப்பரப்பு**

- நுணாவில் மேற்கு சாவகச்சேரி வேறாக்கன்னி கந்தசாமி கோயிலுக்கு அருகாமையில் உள்ளது.
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி.
- நன்னீர் ஊற்று சூழல்
- ஒரு பரப்பின் விலை பிரதான வீதியை முகப்பாகக் கொண்ட காணித் துண்டுகள் 14 இலட்சமும் 18 அடிப் பாதையை முகப்பாகக் கொண்ட காணித் துண்டுகள் 12 இலட்சம் வரையும் உள்ளது.
- பார்வையிடும் நேரம் காலை 6 மணி முதல் மாலை 6 மணிவரை




தொடர்புகளுக்கு:- ஜெயம்

(16586)

077 814 7389, 077 986 5457


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தகுதி நீக்கப்பட்டவர்களுக்கும் நலன்புரிக் கொடுப்பனவுகள்

## அமைச்சரவை அனுமதி

(கொழும்பு)

அஸ்வெசும நலன்புரி திட்டத்திற்காக தகுதி நீக்கம் செய்யப்பட்ட சமுர்த்தி பெறுநர்களுக்கு தொடர்ந்தும் சமுர்த்தி நலன்புரிக் கொடுப்பனவுகளை வழங்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது என இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இடம் பெற்ற அமைச்சரவை கூட்டத்தின் போதே அமைச்சரவை இதற்கு அங்கீகாரம் வழங்கியுள்ளதாக அமைச்சர் கூறியுள்ளார்.

அஸ்வெசும நலன்புரி திட்டத்திற்காக 393,094 சமுர்த்தி பெறுநர்கள் தகுதி நீக்கம் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (4-5)



# எரிபொருள் விநியோகத்தை ஆரம்பித்தது சினோபெக்

(கொழும்பு)

சீனாவின் சினோபெக் நிறுவனத்தினால் நாட்டிற்கு கொண்டுவரப்பட்ட முதலாவது எரிபொருள் தொகுதியை இறக்கும் பணி தற்போது இடம்பெறுகின்றது.

குறித்த தகவலை மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தனது டுவிட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

இதேவேளை எரிவாயு நிலைய விநியோகஸ்தர்களுடன் ஒப்பந்தங்களில் கையெழுத்திட்ட பிறகு, சினோபெக் நாடு முழுவதும் 150 எரிவாயு நிலையங்களுடன் சில்லறை பெற்றோலிய நடவடிக்கைகளைத் தொடங்கவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (4-5)

# 43 இலங்கையர்களை கடத்தும் முயற்சி முறியடிப்பு

(ஜோர்தான்)

ஜோர்தானில் இருந்து அதன் மேற்குக் கரைக்கு இலங்கைப் பிரஜைகள் 43 பேரை கடத்தும் முயற்சியை ஜோர்தான் பாதுகாப்புத் துறையினர் முறியடித்துள்ளனர்.

பாலஸ்தீனிய பிரதேசங்களுக்குள் சட்டவிரோத பணிக்காக குறித்த இலங்கையர்கள் அழைத்து செல்லப்படவிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

அதேநேரம் ஆரம்ப விசாரணைகளுக்கு அமைய மனித கடத்தல் குற்றச்சாட்டின் கீழ் மூன்று இடைத்தரகர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக ஜோர்தான் ஊடகம் ஒன்று அறிவித்துள்ளது.

குறித்த இலங்கையர்கள் மனித கடத்தலில் பாதிக்கப்பட்டவர்களாகக் கருதப்பட்டு, அவர்களுக்குத் தேவையான பாதுகாப்பையும் ஆதரவையும் ஜோர்தான் அதிகாரிகள் வழங்கியுள்ளனர். (4-5)

# மு.வண்டி கட்டணங்களில் எந்த மாற்றமும் இல்லை

(கொழும்பு)

ஒவ்வொரு மாதமும் அரசாங்கம் மேற்கொள்ளும் எரிபொருள் விலை திருத்தங்களுக்கு அமைவாக முச்சக்கர வண்டி கட்டணங்கள் திருத்தம் செய்யப்பட மாட்டாது என அகில இலங்கை முச்சக்கரவண்டி சாரதிகள் சங்க தலைவர் தெரிவித்துள்ளார்.

முச்சக்கரவண்டி கட்டணங்களை ஒழுங்குபடுத்துவதற்காக மேல் மாகாண சபை குழுவொன்றை நியமித்துள்ள போதிலும், துரதிர்ஷ்டவசமாக இதுவரை கட்டண கட்டுப்பாடு எதுவும் இடம்பெறவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இருப்பினும் அரசாங்கத்தின் முடிவுகளுக்கு ஏற்ப முச்சக்கரவண்டி கட்டணங்களை மாற்றியமைப்பதில்லை என்று சங்கம் முடிவு செய்திருந்தது.

முச்சக்கரவண்டி சாரதிகள் வாடிக்கையாளர்களுடன் கலந்துரையாடிய பின்னர் தமது கட்டணங்கள் தொடர்பில் தமது சொந்த முடிவுகளை எடுக்குமாறும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (4-5)

## சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைகளுக்கான வாக்களிக்க தகுதியுடைய வாக்காளர் பட்டியல் தொடர்பான அறிவித்தல்

சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைகளுக்கான 30.06.2023 ஆம் திகதியுடன் முடிவுறுத்தப்பட்ட வாக்களிக்கத் தகுதியுடைய வாக்காளர்களின் பெயர், விபரம் அடங்கிய வாக்காளர் பட்டியல் இயங்குகின்ற கிளைகளிலும் இயங்காத கிளைகளின் பட்டியல் சங்கத் தலைமை காரியாலயத்திலும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன என்பதனை அறியத் தருகின்றோம்.

**வாக்காளர் பட்டியல் காட்சிப்படுத்தப்படவுள்ள இடங்களின் விபரம்:-**

| கிளை இலக்கம் | காட்சிப்படுத்தப்பட்டுள்ள இடம் | கிளை இலக்கம் | காட்சிப்படுத்தப்பட்டுள்ள இடம் |
|---|---|---|---|
| கிளை -01 | -கிளை நிலையம் -01 | கிளை-16 | -சங்க எரிபொருள்நிரப்பு நிலையம் |
| கிளை -02 | -கிளை நிலையம் -02 | கிளை-17 | -சங்க தலைமை காரியாலயம் |
| கிளை -03 | -சங்க தலைமை காரியாலயம் | கிளை-18 | -சங்க தலைமை காரியாலயம் |
| கிளை -04 | -சங்க தலைமை காரியாலயம் | கிளை-19 | -சங்க தலைமை காரியாலயம் |
| கிளை -05 | -சங்க தலைமை காரியாலயம் | கிளை-20 | -சங்க தலைமை காரியாலயம் |
| கிளை -06 | - சங்க தலைமை காரியாலயம் | கிளை-21 | -சங்க தலைமை காரியாலயம் |
| கிளை -07 | -சங்க தலைமை காரியாலயம் | கிளை-22 | - சங்க தலைமை காரியாலயம் |
| கிளை -08 | - சங்க தலைமை காரியாலயம் | கிளை-23 | - சங்க தலைமை காரியாலயம் |
| கிளை -09 | - சங்க தலைமை காரியாலயம் | கிளை-23A | -சங்க தலைமை காரியாலயம் |
| கிளை -10 | -சங்க தலைமை காரியாலயம் | கிளை-24 | -சங்க தலைமை காரியாலயம் |
| கிளை -11 | -சங்க தலைமை காரியாலயம் | கிளை-25 | -ஏழாலை கிராமிய வங்கி |
| கிளை -12 | -சங்க தலைமை காரியாலயம் | கிளை-26 | -சங்க தலைமை காரியாலயம் |
| கிளை -13 | -இணுவில் கிராமிய வங்கி | கிளை-28 | -சங்க தலைமை காரியாலயம் |
| கிளை -14 | - சங்க தலைமை காரியாலயம் | கிளை-29 | -சங்க தலைமை காரியாலயம் |
| கிளை -15 | -சங்க தலைமை காரியாலயம் | கிளை-30 | -சங்க தலைமை காரியாலயம் |

இவ்வாக்காளர் பட்டியல் **03.08.2023** ஆம் திகதி தொடக்கம் எதிர்வரும் **21.08.2023** ஆம் திகதி வரை மேற்குறிப்பிட்ட இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டிருக்கும் என்பதுடன் மேற்படி வாக்காளர் பட்டியல் தொடர்பான திருத்தங்கள், ஆட்சேபனைகள் ஏதும் இருப்பின் சங்கச் செயலாளருக்கு எழுத்து மூலம் எதிர்வரும் **22.08.2023**ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு முன்னர் அறியத் தருமாறு கேட்டுக் கொள்கின்றோம். பின்னர் வரும் ஆட்சேபனைகள் எதுவும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

**செயலாளர்,**
**சுன்னாகம் ப.நோ.கூ.சங்கம்(வ-து).**

(சி-6990)

# இராசிபலன்

02.08.2023
ஆடி 17, புதன்கிழமை
பிரதமை முன்னிரவு 10.42 மணிவரை
திருவோணம் பிற்பகல் 3.34 மணிவரை

சுபநேரம்-4.33-6.03 மணிவரை
இராகுகாலம்-12.03-1.33 மணிவரை

சந்திராஷ்டமம்-
புனர்பூசம்,பூசம்.

வளவன்

**மேஷம்** – பெரிய மனிதர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், வருங்கால நலன்கருதி சேமிக்க முற்படுவீர்கள், வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும்.

**கடகம்** – நீண்டநாளைய நண்பர் ஒருவரின் சந்திப்பு இடம்பெறலாம், தொழிலில் அதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**துலாம்** – செல்லும் இடங்களில் சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், வாகன சுகமுண்டு, பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், போசன சுகமுண்டு.

**மகரம்** – பொதுநலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், உடல் நலனில் அக்கறை கூடும், தொட்ட காரியங்களில் வெற்றி பெற அம்பிகையை வழிபட வேண்டிய நாள்.

**ரிஷபம்** – தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், நல்லவர்களைச் சந்தித்து நலம் காணும் நாள், குடும்பத்தில் நிலவி வந்த குழப்பங்கள் அகலும்.

**சிம்மம்** – சிக்கனத்தைக் கடைப்பிடிக்கும் எண்ணம் உருவாகும், பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம், மறைமுக எதிர்ப்புகள் மாறும், கௌரவமான நாள்.

**விருச்சிகம்** – சேமிப்பு உயர்வதற்கான வழியைக் கண்டு கொள்வீர்கள், பொது வாழ்வில் புகழ் கூடும் நாள், பயணங்களால் பலனுண்டு, போசன சுகமுண்டு.

**கும்பம்** – சாப்பிடக் கூட நேரமில்லாமல் வேலைகளைச் செய்வீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும் நாள், தேவையற்ற மனச் சஞ்சலங்களைத் தவிர்ப்பது நல்லது.

**மிதுனம்** – எந்தக் காரியத்திலும் நிதானமாக நடந்து கொள்வது நல்லது, வரவைக் காட்டிலும் செலவு கூடலாம், கவலைகள் தீர இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள்.

**கன்னி** – நீண்ட நாட்களாக தள்ளிப் போட்டு வந்த காரியமொன்றை இன்று செய்து முடிப்பீர்கள், மனநிறைவு கூடும் நாள், செய்தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**தனுசு** – தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும், குடும்பத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு, கொடுக்கல் -வாங்கல்கள் ஒழுங்காகும்.

**மீனம்** – அதிஷ்ட வாய்ப்புக்கள் வந்து சேரலாம், பயணங்கள் செல்ல போட்ட திட்டங்கள் கைகூடும், நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு.

**அன்பளிப்பு பொருளை விட அதை அளிக்கும் முறை தான் மதிப்பு மிக்கது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐக்கிய தேசிய கட்சி நிச்சயம் தோல்வியடையும்

## எதிர்க்கட்சி



(கொழும்பு)

எதிர்வரும் காலங்களில் ஐக்கிய தேசியக் கட்சி நிச்சயமாக தோல்வியடையும் என்பதால் அவர்களை மொட்டுக் கட்சியினர் கூட ஏற்றுக் கொள்ளமாட்டார்கள் என பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஐக்கிய தேசியக் கட்சிக்கு நாட்டின் அதிகாரத்தை ஒப்படைக்கும் அளவுக்கு, மக்கள் ஆணை இன்னமும் கிடைக்கவில்லை.

மக்கள் அமைதியாக இருக்கிறார்கள் என்பது உண்மைதான். ஆனால், அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியை மக்கள் நிச்சயமாக வெற்றியடையச் செய்வார்கள். ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான கூட்டணி வெற்றிபெறும் என்பதில் சந்தேகம் இல்லை. எனவே, ஐக்கிய தேசியக் கட்சி நிச்சயமாக தோல்வியடையும்.

அவர்களை மொட்டுக் கட்சியினர் கூட ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்" என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (4-5)

# நீர்வேலியில் ஆலய திருவிழாவில் தாலிக்கொடி திருட்டு

## நான்கு பெண்கள் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்.நீர்வேலியிலுள்ள பிள்ளையார் ஆலயத்தில் இடம்பெற்ற தேர்த்திருவிழாவின் போது பெண் ஒருவரின் தாலிக்கொடியை களவாடிய சந்தேகத்தில் 4 பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட 4 பெண்களில் இந்தியப் பிரஜை ஒருவரும் உள்ளடங்கியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தேர்த் திருவிழாவில் தண்ணீர் பந்தலில்பானங்கள் வழங்கிக் கொண்டிருந்தபோதே பெண் ஒருவரின் தாலிக்கொடி களவாடப்பட்டுள்ளது.

இதையடுத்து அங்கு சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடிய சிலாபத்தைச் சேர்ந்த 26 வயது பெண், வவுனியாவைச் சேர்ந்த 37 வயதான பெண், மாத்தறையைச் சேர்ந்த 28 வயதுப் பெண் மற்றும் 49 வயதான இந்தியப் பிரஜை ஆகியோர் மக்களால் பிடிக்கப்பட்டு கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-5)

# நிழல் தரும் மரங்கள் விசமிகளால் எரித்து அழிப்பு

(அராலி)

சிரமங்களுக்கு மத்தியில் பல வருடங்களாக, தரவை நிலத்தில் சிறிது சிறிதாக வளர்க்கப்பட்ட மரங்கள் சிலரின் பொறுப்பற்ற செயற்பாட்டால் தீயில் முற்றாக எரிந்து நாசமாகியது.

யாழ்ப்பாணம் - மண்கும்பான் பொது நிர்வாக ஒய்வு விடுதி அருகிலே மிகுந்த பணச்செலவில் நடப்பட்டு பராமரிக்கப்பட்டு வந்த நிழல் தரும் மரங்கள் பொறுப்பற்றவர்களால் நேற்று எரித்து அழிக்கப்பட்டுள்ளது.

மேய்ச்சல் தரவை புற்கள் மாடுகளுக்கு உணவாகக் கூடாது என்பதற்காக எரித்து அழிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ள விமசிகளினாலேயே இந்த வேலை செய்யப்பட்டுள்ளதாக சந்தேகிக்கப்படுகிறது. (4-5-104)





வரலாற்றுச் சிறப்புமிக்க யாழ்ப்பாணம் - வேலணை, மண்டைதீவு புனிதபேதுரு வானவர் அந்தோனியாரின் தேவாலயத்தின் வருடாந்த நவநாள் கூட்டுத்திருப்பலி நேற்று சிறப்பாக இடம்பெற்றது. யாழ்ப்பாண மறை மாவட்ட பங்கு குருமுதல்வர் ஜெயரட்ணம் கலந்துகொண்டு திருப்பலியினை ஒப்புக் கொடுத்தார். (படம்-கஜிந்தன்)



கரணவாய் மூத்த விநாயகர் ஆலயத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை தேர்த் திருவிழா பெருந்திரளான பக்தர்கள் சூழ நடைபெற்றது. (படம்:-மகாலிங்கம்)

# தமிழர்கள் பிரச்சினைக்கு இலங்கைக்குள்ளேயே தீர்வு

## மிலிந்த மொரகொட



(கொழும்பு)

தமிழர் பிரச்சினைக்கு இலங்கைக்குள் தீர்வு காணப்பட வேண்டும் என இந்தியாவிற்கான இலங்கை உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொட தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தியாவிற்கு செல்லும் பயணத்தை அதிகரிப்பதற்காக தரைப்பாலங்கள், பாலங்கள், குழாய்கள், மின்சாரம் கடத்தும் பாதைகள் மற்றும் தரை யிறங்கும் உட்கட்டமைப்புகளை உருவாக்க வேண்டும்என்றும் இந்தியாவிற்கும் அதன் அண்டை தீவுக்கும் இடையிலான உறவுகளை வளர்ப்பதற்கு நில இணைப்பு அவசியம் எனவும் மிலிந்த மொரகொட தெரிவித்துள்ளார். (4-5)


# மணிவிழாவும் சேவைநலன் பாராட்டும்

செல்வி.செல்லத்துரை விஜயகுமாரி

ஆசிரியர் (SLTS I பயிற்றப்பட்ட சங்கீதம்)



இசையால் வசமாக்கி எங்கள்
இதயங்களில் இனிதே பதிவான
இசைக் குயிலே என்றும்
வெற்றியின் நாயகியே விஜயகுமாரியே,
மணிவிழாக் காணும் மாண்புறு நாளில்
மகத்தான உம்சேவை மறவோம்
மாகாண சாதனையும் தேசிய சாதனையும்
வேலாயுத மாணவர்கள் பெற்றிட
உறுதுணையாய் நின்ற தாயே!
முப்பத்து மூன்று ஆண்டுகள் நிறைவாய்
பணி செய்து மகிழ்வாய் இன்று
சேவையில் ஒய்வு பெறும் நாளில்
வாழ்த்துகிறோம் வாழ்க பல்லாண்டு..

சேவை விபரம்
யா/தம்பசிட்டி மெ.மி.த.க பாடசாலை
1990.03.29-1998.01.15
யா/பரு.சித்திவிநாயகர் வித்தியாலயம்
1998.01.16 -2004.01.01
யா/சென்தோமஸ் றோ.க.பெ. பாடசாலை
2004.01.02 -2013.01.01
யா/வேலாயுதம் மகா வித்தியாலயம்
2013.01.02- இன்று வரை

(C 6991)

பாடசாலைச் சமூகம்- யா/வேலாயுதம் மகா வித்தியாலயம், பருத்தித்துறை.


# சந்தைகளில் நேற்றைய விலைகள்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 200 | 240 | 240 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 200 | 240 |
| பச்சைமிளகாய் | 300 | 350 | 500 | 350 |
| தக்காளி | 280 | 300 | 300 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 250 | 200 | 300 |
| கோவா | 250 | 220 | 280 | 300 |
| கரட் | 350 | 540 | 520 | 600 |
| பூசணி | 120 | 120 | 100 | 160 |
| புடோல் | 80 | 80 | 120 | 200 |
| வாழைக்காய் | 150 | 160 | 120 | 120 |
| சின்ன வெங்காயம் | 300 | 260 | 400 | 350 |
| பெரிய வெங்காயம் | 160 | 140 | 130 | 150 |
| பாகற்காய் | 350 | 360 | 400 | 400 |
| வெண்டக்காய் | 160 | 120 | 120 | 300 |
| கருணைக் கிழங்கு | 160 | 180 | 180 | 200 |
| பயற்றங்காய் | 200 | 180 | 150 | 200 |
| லீக்ஸ் | 260 | 280 | 250 | 300 |
| பீற்றூட் | 180 | 160 | 220 | 300 |
| கறிமிளகாய் | 350 | 400 | 400 | 400 |
| முருங்கைக்காய் | 300 | 400 | 350 | 300 |
| போஞ்சி | 500 | 500 | 450 | 600 |
| கத்தரிதம்புள்ள | 200 | 150 | 240 | 200 |
| கீரை - 1 பிடி | 80 | 70 | 80 | 100 |
| தேசிக்காய் | 200 | 200 | 100 | 600 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 70 | 60-80 |
| இராசவள்ளி | 300 | 350 | 250 | 250 |
| வெங்காயப்பூ | 160 | 140 | 200 | 300 |
| முள்ளங்கி | 80 | 100 | 130 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 80 | 50 |
| வல்லாரை | 50 | 30 | 40 | 60 |
| ஈரப்பலா | 140 | 150 | 100 | 100 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒருநாளி உணவு தவிர்த்தல் ஓருயிர் காக்கும்!



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

இவ்வுலகில் வாழும் அனைத்து ஜீவராசிகளுக்கும் உணவு அத்தியாவசியமானது. ஆனால் அது உயிர் காக்கும் உணவாக பலருக்கு இருக்கின்றது என்பதனை நாம் உணரத் தலைப்படுவதில்லை. பல வேளைகளில் எமது வீடுகளிலேயே நாம் சமைக்கும் உணவு மிஞ்சிப் போவதும் அதனை நாம் வீணாக கழிவாக கொட்டுவதும் உண்டு. ஆனால் தினசரி ஒருநாளியேனும் வயிறார உண்ணும் நிலையில் இவ்வுலகில் மக்கள் இல்லையென்பதை அறியும் போது மனம் பரிதவிக்கின்றது. இப்படியொரு நிலையா இவ்வளவுக்கு பட்டினியா என எண்ணத் தோன்றுகின்றதல்லவா.

அனுதினம் உணவுக்காக மக்கள் அலைந்து திரியும் நிலை இங்கும் வராது நாம் முன்னெச்சரிக்கையான நடவடிக்கைகளில் ஈடுபடல் அவசியம். உற்பத்தியாளனை பாதுகாக்கும் திட்டங்கள் முனைப்புடன் முன்னெடுக்கப்படல் வேண்டும்.

பொருளாதார தடையினால் கியூபா நாட்டில் பஞ்சம் ஏற்பட்ட போது அந்நாட்டின் அப்போதைய தலைவராக இருந்த பிடல் காஸ்ரோ விவசாயிகளையும் மருத்துவர்களையும் அதிகம் கௌரவிக்கத்தக்கவர்களாக அறிவித்து விவசாயசெய்கையையும் மருத்துவதுறைச்சார் அபிவிருத்தியையும் தம்மக்களைக் கொண்டே மேற்கொண்டார். இதனால் பொருளாதார தடை அந்நாட்டு மக்களில் பாரிய பாதிப்பு எதனையும் ஏற்படுத்தவில்லை என்பதும் மக்களை காப்பாற்றிய பெருமையுடையவராக பிடல் காஸ்ற்றோ அடையாளப்படுத்தப் பட்டார்.

மருத்துவர்களின் தேவையும் மருத்துவ நிபுணர்களின் அவசியமும் உணரத் தலைப்பட்டதால் அந்நாட்டு மக்களின் உயிரிழப்புக்களை கணிசமான அளவுக்கு குறைக்க முடிந்தது. உற்பத்தியாளர்களை ஊக்குவித்ததால் பஞ்சம், பட்டினி ஏற்படவில்லை. இன்னும் 60 சதவீதமான உற்பத்தியை சேதன விவசாயத்திலேயே பெறுகின்றனர் என்பது ஆச்சரியந்தருகின்ற செய்தி.

மாறாக தற்போது எமது நாட்டினைப் பொறுத்த வரையில் நிலவரம் தலைகீழாக மாறத் தொடங்கியிருக்கின்றது. பொருளாதாரச் சரிவும் சரியான திட்டமிடலின்மையால் பொருட்களின் விலையதிகரிப்பும் வாழ்க்கைச் செலவின் அதீத உயர்வும் இவற்றை ஈடுகட்ட வலிந்து திணிக்கப்பட்ட வரி அதிகரிப்பும் பல மருத்துவ நிபுணர்கள் மட்டுமின்றி அனைத்து துறைசார் நிபுணர்களையும் வெளிநாட்டில் தஞ்சமடைய தூண்டி விட்டிருக்கின்றது. கற்றறிந்தோர் இன்னும் திறனுடையவர்களை பல நாடுகள் வரவேற்கத் தொடங்கி அவர்களுக்காக வீசா கதவுகளையும் திறந்து விட்டிருப்பது இந்நிலைமையை இன்னும் ஊக்குவிப்பதாக அமைகின்றது. சுற்றுலா பயணிகளாக வெளிநாடுகளிலிருந்து வருபவர்களையும் அவர்களின் வாழ்க்கை உயர்வையும் கண்ணுற்ற அனைவரும் அந்த வாழ்க்கை முறைக்கு தங்களையும் இணைத்துக் கொள்ள விரும்பி வெளிநாடுகளை நாடும் தன்மை அதிகரித்திருக்கின்றது. இது பற்றியே எங்கும் பேச்சு. ஆனாலும் இன்னும் மனிதாபிமானத்தை கையில் வைத்துக் கொண்டு போர்நடை பெற்ற காலத்திலிருந்து எமது மக்களுக்காக சேவையாற்றும் மருத்துவ நிபுணர்களையும் மருத்துவ உலகத்தையும் உற்பத்தியாளனையும் சேவை மனப்பான்மையுடைய பல்துறைசார் நிபுணர்களையும் இம்மண்ணும் மக்களும் பெற்றிருக்கின்றனர் என்பது பெருமிதங்கொள்ளவும் இன்னும் மன ஆறுதலடையவும் செய்கின்றது.

தற்போது உலகளவில் 49 நாடுகளில் 49 மில்லியன் மக்கள் உணவின்றி தவித்துக் கொண்டிருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இது நடப்பது ஆபிரிக்க தேசத்தில், ஒரு காலத்தில் சோமாலியா நாட்டில் நடந்த பெரும் சோகக்கதையிது. ஆனால் ஐக்கியநாடுகளின் உணவு விவசாய தாபனத்தின் முழு முயற்சியினால் அங்கே பஞ்சம், பட்டினியை தவிர்க்க முடியுமளவுக்கு உணவுற்பத்தியை மக்கள் மயப்படுத்தியுள்ளனர். இன்னும் இம் முயற்சியை முன்னெடுத்துச் செல்லும் தன்மைக்குள் பல நாடுகள் உதவத் தலைப்பட்டுள்ளன.

## இனியொரு பசுமைப்புரட்சிக்கு...



உலக நாடுகளில் ஏற்படும் மாற்றங்கள் எமது நாட்டையும் இத்தகையதொரு நிலைக்கு கொண்டு வந்துவிடுமோ என பலரும் எதிர்வுகூறத் தொடங்கியுள்ளனர். உணவுப் பற்றாக்குறை ஏற்படுமளவுக்கு உற்பத்தியில் ஏற்படும் சரிவு காலநிலை மாற்றத்தினால் பயிர் உற்பத்தியில் பீடைகளினால் ஏற்படும் இழப்பு, களஞ்சியப்படுத்தலில் ஏற்படும் இழப்பு, சந்தைப்படுத்தலில் திக்கு முக்காடும் விலைச்சரிவு இவற்றுடன் உற்பத்தியான பொருளை அனைத்து மக்களுக்கும் கிடைக்க வழி செய்வதிலுள்ள இடர்பாடு இவை அனைத்தும் பஞ்சம், பட்டினியை விரைந்து உருவாக்கும் வழித் தடங்களாகும்.

எமது நாட்டின் உற்பத்தியினளவையிட்டு நாம் சந்தோசப்பட்டுக் கொள்ள முடியாது. இந்த நிலைமை எந்நேரமும் மாற்றமடையலாம். 2019 களில் நெல்லுற்பத்தியில் தன்னிறைவு என மார்தட்டி வெளிவந்த செய்தி அடுத்த வருடமே உற்பத்தி குறைந்தவுடன் அப்படியே ஆடி அடங்கிவிட்டது. எம்மாலும் முடியும் என உற்பத்தியை கூட்டுவதற்கான முயற்சியுடன் இன்னும் எமது விவசாயப் பெருமக்கள் வீறாப்பு கொண்டிருப்பதனை உணர முடிகின்றது. இம்மண்ணுடன் வாழும் மக்கள் இம் மண்ணையும் மறக்க விரும்பவில்லை, இம்மண்ணையும் விட்டு எங்கும் போகவும் விரும்பவில்லை. இனிவரும் சந்ததியை வாழவைக்கும் அனைத்து முயற்சிகளிலும் ஈடுபட்டிருக்கும் அவர்களைப் பாதுகாப்பதும் அவர்களுக்கான தேவைகளை சலுகைகளை வழங்குவது அரச இயந்திரத்தின் கடமையாகும். அதற்கு அனைவரும் ஒத்துழைப்பு நல்கவேண்டும். உழவன் விளைவித்த உணவின்றேல் அனைத்தும் நின்றுவிடும் என்பதனை நாம் அறிந்தும் உணர்ந்தும் இருக்கின்றோம். அதனால் அதற்கான மதிப்பையும் மரியாதையையும் கொடுப்பதோடல்லாது விவசாயம் நலிவுறாமல் பார்ப்பதும் மிகவும் முக்கியமானதாகும். இங்குள்ள பொருட்கள் விளையும் போது வெளிநாட்டிலிருந்து அதே பொருட்களை இறக்குமதி செய்து நுகர்வோருக்கு நன்மை செய்கின்றோம் எனக்கூறி விவசாய பெருமக்களின் வயிற்றிலடிக்காதீர்கள்.

இது எதிர்கால ஆதாயத்திற்கான செயலாக இருந்தாலும் அவசியம் இக் கடுமையான காலகட்டத்தில் உற்பத்தியாளனை, விவசாய செல்வங்களை பாதுகாக்கும் பொறுப்பு மிக முக்கியமானதாகும். மேலும் அவர்களுக்கான விவசாயம் சார்ந்த உற்பத்தி, உள்ளீடுகளில் கிடைக்கும் தன்மை, தொழில்நுட்பம், மற்றும் களஞ்சியப்படுத்தலும் சந்தைப்படுத்தலும் என அனைத்திற்கும் வழிசெய்து கொடுத்தல் தகும்.

ஆக மொத்தத்தில் நாம் தினமும் சமைக்கும் உணவு எமக்கு மேலதிகமாக இருப்பின் உண்ட மீதியை ஏனையவர்களுக்கு வழங்காது அவர்களுக்காகவும் சமைத்து அவர்களது பசியாற நாம் அனைவரும் முன்வர வேண்டும். இங்கு தான் மனிதாபிமானம் வாழும், வாழுகின்றது. இதனை அன்றைய அறைகூவலில் எட்டயபுரத்து முண்டாசுக் கவிஞன்... தனியொருவனுக்கு உணவில்லையெனில்... என விழித்ததும் அதனை இன்னும் சிறப்பாக்கி தனியொருவனுக்கு ஒரு நாளியேனும் உணவில்லையெனில் ஜெகத்தினில் உள்ளோரை விழிப்படையச் செய்து உணவைப் பெருக்கிடுவோம்.

அதனை அனைவருக்கும் கிடைக்க வழி செய்திடுவோம் என அறைகூவிடுவோம். நாம் செய்வதைத்தான் சொல்வோம் சொல்வதைத்தான் செய்வோம் என்ற வெட்டிப்பேச்சினை நடைமுறையில் செய்து காட்டும் தொண்டர்களை அவர்களை இணைத்து செயற்படும் தொண்டு நிறுவனங்களை இந்த கைங்கரியத்தில் ஈடுபட வைப்பதனால் உணவுக்காக ஏங்கும் அனைத்து உயிர்களுக்கும் ஒருவேளை உணவை வழங்கும் புண்ணியத்தில் இணைந்து கொள்ளலாம்.

இந்த முயற்சியில் இணைந்து கொள்ள பலர் நிச்சயம் முன்வருவார்கள். அவர்கள் அனைவரும் ஒருங்கிணைக்கும் பணியில் அந்தந்தப் பகுதி மாணவர்கள், ஆசிரியர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் இன்னும் அன்புள்ளம்கொண்ட அனைவரையும் இணைத்திடலாம். இம்முயற்சி நிச்சயம் திருவினையாக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 1

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 245





இன்றைக்கு அவர்கள் நமக்குப் பகைவர்களானாலும் முன்னால் அப்படியில்லையே? தங்கள் தந்தையும் பாட்டனாரும் அவரை எவ்வளவு மதித்து மரியாதை செய்தார்கள்? அப்படிப்பட்டவர் அக்னி சாட்சியாக மணந்து கொண்ட பெண்ணை அவள் எவ்வளவுதான் கெட்டவளானாலும் தாங்கள் மனத்திலும் கருதலாமா?"

"கூடாது, பார்த்திபா, கூடாது! அது எனக்குத் தெரியாது என்றா நினைக்கிறாய்? தெரிந்திருப்பதினாலேதான் இந்த மனவேதனை. அவள் பழுவேட்டரையரை மணந்த பிறகு என் நெஞ்சில் இடம் பெறவில்லை. அதற்கு வெகு காலம் முன்பே என் உள்ளத்தில் அவளுடைய மோக விஷம் ஏறிவிட்டது. அதைக் களைந்தெறிய எவ்வளவோ முயன்றும் முடியவில்லை. குற்றம் எல்லாம் அவள் பேரில் என்று தோன்றும்படி நான் பேசுகிறேன். குற்றம் யாருடையது என்பதைக் கடவுளே அறிவார். பார்க்கப் போனால், பாவம் பழியெல்லாம் எங்களைப் படைத்த கடவுள் தலையிலேயே விழ வேண்டும். அல்லது எங்களைச் சந்திக்கப்பண்ணிப் பின்னர் பிரித்து வைத்த விதியின் பேரில் குற்றம் சொல்ல வேண்டும்!"

"அரசே! நந்தினி பழுவூர் ராணியாவதற்கு முன்னால் தாங்கள் அவளைச் சந்தித்ததுண்டா? எங்கே, எப்போது எப்படிச் சந்தித்தீர்கள்?"

"அது பெரிய கதை. இன்றைக்கு அதைக் கேட்க விரும்புகிறாயா?"

"கட்டாயம் கேட்க விரும்புகிறேன். அதைத் தெரிந்து கொள்ளாவிட்டால் எனக்கு மன நிம்மதியிராது. நாளைக்கு இலங்கை போகச் சொல்லுகிறீர்களே? அங்கே சென்று என் கடமையைச் சரிவரச் செய்ய முடியாது. நிலைமை இன்னதென்பதைத் தெரிந்து கொண்டு தங்களுக்கு ஆறுதல் சொல்லிவிட்டுப் போனால் தான் என் உள்ளம் ஒருவாறு நிம்மதி அடையும்!"

"நண்பா! எனக்கு ஆறுதல் சொல்லப் போகிறாயா? இந்த ஜன்மத்தில் எனக்கு ஆறுதல் என்பது கிடையாது. அடுத்த பிறவியில் உண்டா என்பதும் சந்தேகம் தான். உன்னுடைய மன நிம்மதிக்காகச் சொல்கிறேன். உன்னிடம் சொல்லாமல் நான் எதையோ ஒளித்து வைத்திருப்பதாக எண்ணிக் கொண்டு நீ இலங்கை போக வேண்டியதில்லை!"

இவ்விதம் கூறி ஆதித்த கரிகாலன் சிறிது நிதானித்தான். பிறகு ஒரு நெடிய பெருமூச்சு விட்டு விட்டுச் சொல்லத் தொடங்கினான்.

### ஐம்பத்து ஐந்தாம் அத்தியாயம்
### நந்தினியின் காதலன்

"முதன் முதலாக என்னுடைய பன்னிரண்டாம் பிராயத்தில் நந்தினியை நான் சந்தித்தேன். ஒருநாள் பழையாறையில் எங்கள் அரண்மனையின் பின்புறத்திலுள்ள நீர் ஓடையில் நானும் என் தங்கையும் தம்பியும் ஓடம் விட்டு விளையாடிக் கொண்டிருந்தோம். விளையாட்டு முடிந்து ஓடத்திலிருந்து இறங்கிப் பூஞ்சோலை வழியாக அரண்மனைக்குச் சென்றோம். வழியில் எங்கள் பெரிய பாட்டி செம்பியன் மாதேவியின் குரல் கேட்டது. நாங்கள் மூன்று பேரும் பாட்டியிடம் செல்லமாக வளர்ந்தவர்கள். பாட்டியிடம் நாங்கள் ஓடம் விட்டதைப் பற்றிச் சொல்வதற்காக அவருடைய குரல் கேட்ட கொடி வீட்டுக்குள் புகுந்தோம். அங்கே பாட்டியைத் தவிர இன்னும் மூன்று பேர் இருந்தார்கள். மூன்று பேரில் ஒருத்தி எங்களையொத்த பிராயத்துச் சிறு பெண். மற்ற இருவரும் அவளுடைய பெற்றோர்கள் என்று தெரிந்தது. அந்தப் பெண்ணைப் பற்றி அவர்கள் ஏதோ மாதேவடிகளிடம் சொல்லிக் கொண்டிருந்தார்கள். நாங்கள் கொடி வீட்டுக்குள் புகுந்ததும் அங்கிருந்த எல்லாரும் எங்களைப் பார்த்தார்கள். ஆனால் அந்தச் சிறு பெண்ணின் வியப்பினால் விரிந்த நெடிய கண்கள் எங்களைப் பார்த்தது மட்டுமே என் கண்ணுக்குத் தெரிந்தது.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## சிங்கக்குட்டியும் ஸ்மார்ட் போனும்

(நேற்றைய தொடர்ச்சி...)

ஆனால் 'நெட் வேர்க் கனெக்ட் ஆகலை. சுத்துது.. சுத்துது.. ரொம்ப நேரமா சுத்திட்டே இருக்கு. அது மட்டுமா? 'யுவர் சார்ஜ் இஸ் டௌவுன்' என எச்சரிக்குது. 'அடச் சே'னு சிங்கக்குட்டி வெறுத்துப்பேரச்சு.

அப்போது, புதர் மறைவில் சலசலப்பு. சிங்கக் குட்டி பயத்துடன் பார்த்துட்டு இருக்கும் போதே, மூன்று ஓநாய்கள் வெளியே வந்துச்சு. 'உர்ர்ர்ர்'னு வெறிப் பார்வையில் சிங்கக்குட்டியைச் சுற்றி நின்னுடுச்சுங்க.

"ராஜா மகனே.. வசமா மாட்டினியா? உன் அப்பன் பெரிய பலசாலி. தான் வெச்சதே சட்டம்னு எங்க கூட்டத்தை அடிக்கடி



தொந்தரவு பண்ணிட்டே இருக்கான். அவனுக்குச் சரியான பாடம் புகட்டப்போறோம்"னு சொல்லிச்சு ஓர் ஓநாய்.

சிங்கக்குட்டிக்கு அழுகையே வந்திருச்சு. அப்போ, 'கிர்ர்ர்ர்ர்ர்'னு ஓர் இடிச் சத்தம். ஒரு மரத்து மேலிருந்து தொப்புனு குதிச்சது கரடி. ஓநாய்களைப் பார்த்து அது போட்ட சத்தத்தில், தரையில் புழுதியே பறந்துச்சு. புழுதி அடங்கிப் பார்த்தால், ஓநாய்களைக் காணலை. தலை தெறிக்க ஓடிப் போயிருக்குங்க.

சிங்கக்குட்டி முகத்தில் நிம்மதி. அது கரடியைப் பார்த்து, 'ரொம்ப நன்றி கரடி மாமா'னு சொல்லிச்சு.

"இப்படித் தனியா இவ்வளவு தூரம் வரலாமா?"னு கரடி கேட்க, "ஸாரி மாமா. போன்ல வந்த மெஸேஜைப் பார்த்துட்டே வந்ததில் தூரத்தைக் கவனிக்கலை"னு சொல்லிச்சு சிங்கக்குட்டி.

"ஒரு விஷயத்தில் ஆர்வம் இருக்க வேண்டியது தான். அதுக்காக, அடிமையாகிடக் கூடாது. சரி சரி பார்த்துப் போ"னு கரடி சொல்ல, 'ஹமா' மாமா வழி தெரியலை. மப்பும் ஒர்க் ஆக லை"னு தயங்கிட்டே சொல்லிச்சு சிங்கக்குட்டி.

"சரியா போச்சு. அப்போ, இந்த ஸ்மார்ட் போன் தான் உன்னுடைய மூளை. இதைக் கையிலிருந்து வாங்கிட்டால், நீ வெறும் பூஜ்ஜியமா? எல்லாத்துக்கும் தொழில் நுட்பத்தை மட்டுமே நம்பிட்டு இருக்கக் கூடாது. நம்ம மூளையைவிட உலகில் பெரிய ஆற்றல் கருவி இல்லை. அதைப் பயன்படுத்தணும். ஆனால், கையில் இருக்கிற ஒரு சிறிய கருவியிடம் அதை அடமானம் வெச்சுடுறீங்களே. இது எப்படி இருக்கு தெரியுமா? நம்மகிட்டே வேலைக்கு வந்த வேலைக்காரனிடமே எல்லாத்தையும் ஒப்படைச்சுட்டு அவனுக்கு அடிமையான மாதிரி இருக்கு" எனச் சிரிச்சது கரடி.

சிங்கக்குட்டியால் பதில் பேசமுடியாமல் தலை குனிந்து நின்னுச்சு.

"சரி, சரி வா"னு கரடி நடக்க, "கொஞ்சம் இருங்க மாமா. நான் முன்னாடி நடக்கிறேன். எப்படிப் போகணும்னு யோசிச்சு, கவனிச்சு நடக்கிறேன். எங்காவது தப்பா மாறினால் மட்டும் நீங்க வழிகாட்டுங்க"னு சொல்லிச்சு சிங்கக் குட்டி.

கரடியும் ஒரு புன்னகையோடு பின்னாடி நகர, நம்ம சிங்கக்குட்டி கையிலிருந்த ஸ்மார்ட் போனை ஆஃப் பண்ணிட்டு நடக்க ஆரம்பிச்சது.

(முற்றும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனச்சாட்சியைக் கொல்லக்கூடாது அது நமது நியாய அறிவின் நாடித்துடிப்பாகும்.

– சாமுவேல் காலரிட்ஜ்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## கடலோரங்களை ஆக்கிரமிக்கும் கடலட்டைப் பண்ணைகள்

நம் நாட்டின் பொருளாதாரத்தில் கடல் வளம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது.

கணிசமான மக்கள் கடற்றொழிலில் ஈடுபடுவதன் மூலமாகத் தமது பொருளாதாரத் தேவையை நிறைவு செய்கின்றனர்.

பரவக் கடல் தொடக்கம் ஆழ்கடல் வரை கடற்றொழில் ஆற்றுகின்றவர்களால் கடலுணவை நம் மக்கள் பெற்றுக் கொள்ள முடிகின்றது.

இவ்விதம் கிடைக்கின்ற கடலுணவை ஏற்றுமதி செய்வதன் மூலம் வெளிநாட்டுச் செலாவணியை உழைக்கக்கூடியதாகவும் இருப்பது இங்கு நோக்குதற்குரியது.

இந்தவகையில் கடல் வளத்தை பெற்றுக் கொள்வதற்கு நவீன தொழில்நுட்ப முறைகளை நம் கடற்றொழிலாளர்கள் மத்தியில் அறிமுகம் செய்யும்போது, அதனால் கடல் வளத்தின் பயனை நாம் கூடுதலாகப் பெற்றுக் கொள்ள முடியும்.

அதேநேரம் பாரம்பரியமான மீன்பிடித் தொழிலுக்கும் நாம் குந்தகம் செய்துவிடலாகாது.

அதாவது சாதாரண மீனவர்கள் பரவக் கடலில் வலை வீசி மீன்பிடித்து தமது சீவனோபாயத்தை நடத்தி வருகின்றனர்.

இன்னும் சிலர் கட்டுமரத்தில் சென்று மீன்பிடித் தொழிலில் ஈடுபடுகின்றனர்.

இவர்களின் முயற்சிகள் பாதிக்கப்படாமல் மீன்பிடித் தொழில் நவீனமயப்படுத்தப்பட வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்திருக்க முடியாது.

எதுஎவ்வாறாயினும் தற்போது ஏற்றுமதியை முழுநோக்கமாகக் கொண்டு கடலட்டைப் பண்ணை முயற்சிகள் பெருமெடுப்பில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கடந்த பல வருடங்களாக கடலட்டை பிடித்து அதனை அவித்து சந்தைப்படுத்துகின்ற முயற்சி சிறு அளவில் நடந்ததாயினும் பிற்காலத்தில் கடலட்டை பிடிப்பதற்குத் தடை விதிக்கப்பட்டதன் காரணமாக அந்த முயற்சியில் ஈடுபட்டிருந்த வறிய மீனவர்கள் அத்தொழில் முயற்சியைக் கைவிட வேண்டிய கட்டாயத்துக்கு ஆளாகினர்.

ஆனால் இப்போது ஏற்றுமதியை நோக்காகக் கொண்டு கடலட்டைப் பண்ணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

சுருங்கக்கூறின் கடலோரம் முழுவதும் கடலட்டைப் பண்ணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கடலோரத்தில் நின்று பார்க்கும்போது கடல் முழுவதும் சிறு குடிசைகளாக காட்சியளிக்கின்றன.

கடல் வெளியில் காண்பது சிறு குடிசைகளாயினும் அதற்குள் மிகப்பெரிய ஏற்றுமதிப் பொருளாதாரம் இருப்பதை ஏற்றுத்தானாக வேண்டும்.

இருந்தும் கடலோரத்தில் இருந்து ஒரு குறிப்பிட்ட தூரம் வரையிலும் முழுமையாக கடலட்டைப் பண்ணைக்கு இடம் ஒதுக்கப்பட்டதன் காரணமாக பாரம்பரிய மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டவர்கள் மிகப்பெரும் பாதிப்பை அடைந்துள்ளனர்.

இதுதவிர, கடல் என்பது தனித்து மீன்பிடித்தலுக்கு மட்டுமானதல்ல. அஸ்தி கரைத்தல், பிதிர்க்கடன் செய்தல், சுவாமி தீர்த்தமாடுதல் ஆகிய வாழ்வியல் கடமைகளும் நடக்கின்ற இடமாக கடல் இருப்பதால், கடலட்டைப் பண்ணைக்கு இடம் ஒதுக்கும்போது இவை அனைத்து விடயங்களும் கருத்தில் கொள்ளப்பட வேண்டும்.

# மத்திய வங்கியின் முதலாவது நாணயக் கொள்கை வெளியீடு

(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கி தனது முதலாவது நாணயக்கொள்கை அறிக்கையை நேற்று முன்தினம் வெளியிட்டுள்ளது.

பணவீக்கம் மற்றும் பிற முக்கிய பொருளாதார மாறுபாடுகளின் நடத்தை மீதான மத்திய வங்கியின் கண்ணோட்டத்தை நாணயக் கொள்கை அறிக்கை, உள்நாட்டிலும் உலகளாவிய ரீதியிலும் தற்போதைய மைக்ரோ பொருளாதாரப் போக்குகள் மற்றும் அவற்றின் கண்ணோட்டத்தின் அடிப்படையில் முன்வைக்கிறது.

தற்போதைய மற்றும் எதிர்பார்க்கப்படும் போக்குகளைக் கருத்தில் கொண்டு, பணவீக்கம் மற்றும் பொருளாதார வளர்ச்சி குறித்த முன்னறிவிப்புகளுக்கு இடர்பாடுகளை மதிப்பீடு செய்வதே நாணயக் கொள்கை அறிக்கையின் நோக்கமாகும் என இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இது மத்திய வங்கியின் நாணயக் கொள்கை உருவாக்கத்தின் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலை அதிகரிப்பதுடன், பொதுமக்களின் பணவீக்க எதிர்பார்ப்புகளை உறுதிப்படுத்த உதவும் எனவும் மத்திய வங்கி மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை, இந்த ஆண்டு ஜூன் மாதத்தை தொடர்ந்து, இரண்டாவது மாதமாக ஏற்றுமதி வருவாய் ஒரு பில்லியன் அமெரிக்க டொலர்களை தாண்டியுள்ளதாக மத்திய வங்கி குறிப்பிட்டுள்ளது.

மேலும், வரவு - செலவுத்திட்ட ஆதரவிற்காக உலக வங்கியிடமிருந்து 250 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறப்பட்டதன் மூலம், ஜூன் மாத இறுதிக்குள் மொத்த உத்தியோகபூர்வ கையிருப்பு அளவு 3.7 பில்லியன் அமெரிக்க டொலர்களாக உயர்த்தப்பட்டுள்ளதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது. (4-5)

## அரசியலுக்காக இந்தியா தொடர்பில் தவறாக தகவல் பரப்பப்படுகின்றது

### ஜீவன் தொண்டமான்

இலங்கையில் சில தரப்பினர் இந்தியா பற்றி மக்கள் மத்தியில் தவறான தகவல் பரப்பி அரசியல் செய்கிறார்கள் என ஜீவன் தொண்டமான் இந்திய ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார்.

தொழிலாளர் காங்கிரசின் பொதுச் செயலாளரும், தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சருமான ஜீவன் தொண்டமான், இந்தியாவுக்கு ஒரு வாரகாலம் பயணம் மேற்கொண்டிருந்தார்.

இந்நிலையில் டில்லியில் பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்து விட்டு, சென்னையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினையும் சந்தித்து பேசியமை குறிப்பிடத்தக்கது.

இந்தியாவிற்கான தனது பயணத்தை முடித்து கொண்டு சென்னையில் இருந்து இலங்கைக்கு புறப்படுவதற்காக சென்னை மீனம்பாக்கம் அண்ணா பன்னாட்டு விமான நிலையத்திற்கு வருகை தந்த ஜீவன் தொண்டமான் ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

13 ஆவது திருத்தம் தொடர்பான இலங்கை ஜனாதிபதியின் ஆவணத்தை இந்திய பிரதமர் நரேந்திர மோடியிடம் வழங்கி உள்ளோம்.

மலையக மக்களின் வளர்ச்சிக்காக இந்தியா 750 மில்லியன் ரூபாய் வழங்கியுள்ளது. இதற்காக இந்திய மக்களுக்கும், மத்திய அரசுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினோம். அதில் தமிழக அரசை, இலங்கை மக்களின் வளர்ச்சிக்காக உதவிகள் செய்யுமாறு கேட்டுக் கொண்டுள்ளோம் என்றார். (ம-7)

## பெருமளவு கோடாவுடன் உயரப்புலத்தில் ஒருவர் கைது

இளவாலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட உயரப்புலம் பகுதியில் கசிப்பு காய்ச்சுவதற்கு தயாராக இருந்தவேளை, கசிப்பு காய்ச்சும் உபகரணங்கள் மற்றும் 40 லீற்றர் கோடா என்பவற்றுடன் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இளவாலை பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து பொலிஸார் விசாரணைகள் முன்னெடுத்து வருகின்றனர். விசாரணைகளின் பின்னர் அவர் மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளார். (ம-7,104)

## வவுனியா படுகொலை; 6 பேருக்கு விளக்கமறியல்

வவுனியா பிரதேசத்தில் வீடொன்றின் மீது தாக்குதல் நடத்தி தம்பதியரை படுகொலை செய்து 8 பேரை படுகாயப்படுத்திய குற்றச்சாட்டில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட 6 பேரையும் விளக்கமறியலில் வைக்க வவுனியா நீதிவான் நீதிமன்றம் நேற்று அனுமதி வழங்கியுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது தெரியவந்த தகவலின் அடிப்படையில், குற்றப் புலனாய்வுப் பிரிவின் விசேட குழுவொன்று நேற்று அப்பகுதியிலுள்ள குளமொன்றில் வீசப்பட்டிருந்த, இந்தக் கொடூரமான குற்றச்செயலுக்கு பயன்படுத்தப்பட்டதாக நம்பப்படும் ஆயுதங்கள் பலவற்றைக் கண்டுபிடித்துள்ளனர்.

குறித்த ஏரியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த வேளையில் ஐந்து வாள்கள், ஒரு கொட்டன் மற்றும் மூன்று இரும்பு குழாய்கள் என்பன கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ம-7)

## பேருந்து விபத்து 18 பேர் காயம்

(கொழும்பு)

கொழும்பில் இருந்து நுவரெலியா நோக்கி பயணித்த அரச பேருந்தொன்று வீதியை விட்டு விலகி பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 18 பேர் காயமடைந்துள்ளனர்.

இந்த விபத்து நேற்று அதிகாலை 4.30 மணியளவில் கொழும்பு ஹட்டன் பிரதான வீதியின் வட்டவளை சிங்களப் பாடசாலைக்கு அருகில் இடம்பெற்றுள்ளது.

எதிர்திசையில் இருந்து வந்த பேருந்து ஒன்றுக்கு வழிவிட முற்பட்ட போது பேருந்து வீதியை விட்டு வழுக்கி விபத்துக்குள்ளானதாக தெரிவிக்கப்படுகின்றது.

விபத்தில் காயமடைந்த 18 பேர் வட்டவளை மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதுடன், படுகாயமடைந்த 5 பேர் ஆபத்தான நிலையில் நாவலப்பிட்டி மாவட்ட பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

காயமடைந்த ஏனையவர்களின் நிலைமை கவலைக்கிடமாக இல்லை என வட்டவளை பிரதேச வைத்தியசாலையின் வைத்தியர் ஒருவர் தெரிவித்தார். (ம-7)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை **வியாழக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை யாழ். பிரதேசத்தில்** கப்பூது, தில்லையம்பலம், யாக்காரு நூலகம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும் விஜயன் வருகையிலிருந்து

## பொலநறுவை யுகம் முடியும் வரை- பகுதி I

31


கலாநிதி க.தவலிங்கம்

ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.

தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.




பொலனறுவை இராசதானிக் காலத்தில் சோழ மன்னர்களின் முதலாவது ராஜராஜசோழன்(கி.பி. 985 - 1016), முதலாவது ராஜேந்திரசோழன் (கி.பி. 1012 - 1044) மற்றும் முதலாவது ராஜாதிராஜா சோழன்(கி.பி. 1018 - 1054) ஆகியோரால் வெளியிடப்பட்ட நாணயங்களும் பாண்டிய மன்னர்களால் வெளியிடப்பட்ட நாணயங்களும் பயன் படுத்தப்பட்டுள்ளன என்று முன்னர் பார்த்தோம். இவற்றிற்கு மேலதிகமாக, சீனாவின் சுங் வம்சத்தின் மன்னர்களது நாணயங்களும் அரேபிய நாணயங்களும் பயன்படுத்தப்பட்டுள்ளமை மூலம் அநுராதபுர இராசதானி காலகட்டத்தைப் போன்றே பொலனறுவை இராசதானி காலகட்டத்திலும் இலங்கை சர்வதேச வர்த்தகத்தில் ஈடுபட்டிருந்தமை தெளிவாகின்றது.

### ஆரம்பகால இலங்கையின் சிங்கள மன்னர்களின் நாணயங்கள்

ஆரம்பகால இலங்கையின் அல்லது இலங்கையின் சிங்கள மன்னர்களின் நாணயங்கள் அனைத்தும் ஒரு குறிப்பிட்ட ஆட்சியாளருடன் அல்லது ஒரு குறிப்பிட்ட திகதியுடன் அல்லது வருடத்துடன் அடையாளம் காணமுடியாது.

காரணம், போதுமான அளவு வரலாற்று தகவல்கள் இல்லாததும் மற்றும் நாணயங்களில் மீண்டும் மீண்டும்ஒரே வடிவமைப்பு மற்றும் வடிவம் இருப்பதும் ஆகும். அத்துடன் அப்போதைய நடைமுறையில் இருந்த தன்னிறைவுப் பொருளாதாரத்திற்கு ஒரு கவர்ச்சியான நாணயம் தேவைப்படவில்லை என்பதன் மூலமும் இதனை நியாயப்படுத்தலாம்.

மேலும் நாணயங்களில் வழக்கமான மற்றும் குறிப்பிடப்பட்ட மாற்றங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் போது அதனை பாவனையாளர்கள் தயக்கத்துடனும் சந்தேகத்துடனும் கூட பார்க்கப்படலாம். ஏனெனில் எந்தவொரு செயற்பாட்டுத் துறையிலும் எந்தவொரு திடீர் மாற்றத்திற்கும் மக்கள் தயாராக இல்லை என்பதாகும்.

வெளியிடப்பட்ட பண்டைய நாணயங்களில் பெரும்பாலானவற்றின் முன்பக்கம் தலை வலப்புறமாகத் திரும்பிய நிலையில், கால்களின் இரு புறமும் இரண்டு வளைந்த கோடுகளுடன், இறுதியில் சற்று மேல் நோக்கித் திரும்பி, அந்த உருவம் உடை 'dhoti' அணிந்திருப்பதைக் குறிக்கும் ஒரு மனிதனின் நிற்பது போன்ற தோற்றம் உள்ளது.

இந்த உருவம் தாமரை தண்டு அல்லது தண்டின் மீது வலது புறம் தாமரை மலருடன் நிற்கிறது. பூவின் மேல் ஐந்து பெரிய புள்ளிகள் அல்லது கோளங்கள் தோன்றும் அவை ஒவ்வொன்றினதும் உருவ அளவு மாறுபடுகின்றது. வலது பக்க முழங்கை கீழே வளைந்து கைமேல் நோக்கிதிரும்பியும் மற்றும் கையில் மல்லிகை மலராக அனுமானிக்கப்படும் ஒரு பூ இருப்பது போன்றுள்ளது.

இடது கை வெளிப்புறமாக நீட்டப்பட்டு கீழ் நோக்கி வளைந்து அலங்கார விளக்கைப் பிடித்திருக்கும். உருவத்தின் தலைக்கு பின்னால் இரண்டு பிறை போன்ற வடிவங்கள் நாணயத்தின் விளிம்பில் 40 முதல் 43 மணிகள் இருப்பது போல் தெரிகிறது.

அத்தகைய நாணயங்களின் பின் புறத்தை மேலோட்டமாகப் பார்த்தால், சிங்கள மன்னர் காலத்தின் பெரும்பாலான நாணயங்கள் ஒரு குறிப்பிட்ட வடிவத்தில் அச்சிடப்பட்டவை என்பதைக் குறிக்கின்றது.

பின் புறத்தில் உள்ள வடிவமைப்பு, வலது கையின் கீழ் வலது காலை மடக்கிய நிலையில் அமர்ந்து அல்லது குந்தும் நிலையில் உள்ள ஒரு மனிதனின் உருவத்தை ஒத்திருக்கிறது. இடது கைமேல் நோக்கி உயர்த்தப்பட்டு, "கையில் ஒரு சங்கு உள்ளது, வலது கைக்கு மேல் தலைக்கு பின்னால் இரண்டு பிறை/வடிவமைப்புகள் உள்ளன.

நாணயத்தின் விளிம்பைச் சுற்றி முன் புறத்தில் மணிகள் வரிசையாக காணப்படுகின்றன. நாணயத்தின் இடது பக்கத்தில் தேவநாகரி அல்லது சமஸ்கிருத எழுத்துக்கள் தெரியும். இது ஆட்சியாளரின் பெயரைக் குறிக்கிறது. சிங்கள மன்னர்களின் நாணயங்களின் பின் புறத்தில் தோன்றும் அனைத்து சமஸ்கிருத எழுத்துக்களும் ஒன்றுக்கொன்று சற்று மாறுபடும்.

பழைய காலத்து நாணயங்கள் தேய்வடைந்திருப்பதால் அதில் உள்ள சமஸ்கிருத எழுத்துக்களைப் புரிந்து கொள்வதில் போதுமான அளவுவிட்டுக் கொடுப்பனவு வழங்கப்பட வேண்டி உள்ளது. அத்துடன் சமஸ்கிருத எழுத்துக்களில் ஒரு காலத்தில் இருந்து மற்றொரு காலகட்டத்திற்கு சிறிய மாற்றங்கள் உள்ளன.

இணையத் தகவல்களின் படி, இலங்கையை ஆட்சி செய்த பலமன்னர்களில் ஒன்பது ஆட்சியாளர்கள் மட்டுமே நாணயங்களில் தங்கள் பெயர்களுடன் இணைக்கப்பட்டுள்ளனர். மன்னர் விஜயபாகு I, II, III & IV மற்றும் மன்னர் பராக்கிரமபாகு I & II ஆட்சியின் போது வெளியிடப்பட்ட நாணயங்களில் ஒரே மாதிரியான சமஸ்கிருத எழுத்துக்கள் உள்ளன. எனவே, அத்தகைய எழுத்துக்களால் அடையாளம் காண்பது கடினம்.

இது அரசி லீலாவதிக்கும் பொருந்தும். அவரது முதல், இரண்டாவது மற்றும் மூன்றாவது ஆட்சிகளில் வெளியிடப்பட்ட நாணயங்களில் தோன்றும் தேவ நாகரி எழுத்துக்கள் அடிப்படையில் ஒரே மாதிரியாக உள்ளன. இலங்கையில் காணப்படும் ஆறு பொதுவான மோசா நாணயங்கள் 13 ஆம் நூற்றாண்டில் இரண்டு கால கட்டங்களில் (பொலநறுவை சகாப்தத்தின் வீழ்ச்சி மற்றும் தலைநகரம் தம்பதெனியவிற்கும் பின்னர் யாப்பஹுவாவிற்கும் நகர்த்தப்பட்ட காலம்) மன்னர்களால் வெளியிடப்பட்டுள்ளது போன்றுள்ளது.

### விஜயபாகு வம்சம்

### இலங்கை 1055 - 1110 -விஜயபாகு I

முதலாம் விஜயபாகு என்பவன் இலங்கை வரலாற்றின் (கி.பி. 1055 - 1110) இடைப்பட்ட காலத்தில் ஆட்சி புரிந்த மன்னன் என சூளவம்சம் நூல் குறிப்பிடுகிறது. தன் ஆட்சிக்காலம் முழுவதுமாக சோழருக்கெதிராகப் போர் தொடுத்த இவனால் சோழ மன்னர்கள் பலர் இலங்கையிலிருந்து துரத்தப்பட்டனர் இத்தகைய காரணத்தினால் முதலாம் விஜயபாகு சிங்களவர்களால் போற்றப்பட்டான்.

### முதலாம் விஜயபாகுவின் கண்ணகியம்மன் வழிபாடு

இலங்கையில் பரவிய கண்ணகி வழிபாடானது கி. பி. இரண்டாம் நூற்றாண்டளவில் மட்டக்களப்பின் தென் பகுதியில் அதாவது குறிப்பாக அம்பாறை மாவட்டத்திலுள்ள திருக்கோவில், தம்பிலுவில் பிரதேசத்தில் ஊரக்கை என்னும் இடத்தில் ஆரம்பமானது. கி. பி. இரண்டாம் நூற்றாண்டளவில் பாண்டிய நாட்டின் மதுரை மாநகரில் இருந்து நேரடியாகக் கொண்டு வரப்பட்ட செண்பகச் செல்வி எனும் திருநாமத்துடன் கூடிய கண்ணகி விக்கிரகம் ஒன்று பசுமை நிறைந்த சிறு நதிக்கரையோரம் செம் மண்ணும் செங் கல்லும் கலந்து பிரதிஷ்டை செய்யப்பட்டு ஆலயம் அமைக்கப்பட்டது.

இலங்கையை ஆண்ட மன்னன் முதலாம் விஜயபாகு (கி. பி. 1056 - 1111) ஊரக்கையில் குடி கொண்டிருந்த கண்ணகியம்மன் மீது பக்தி கொண்டிருந்தான் என்றும் அதன் காரணமாக இவ்வாலயத்திற்கு பல நன்கொடைகளை வழங்கி இருந்தான் என்றும் கிராமிய இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன.

சோழரது ஆட்சியில் இருந்து இலங்கையை விடுவிப்பதற்கான முயற்சியில் முதலாம் விஜயபாகு மன்னன் ஈடுபட்டான். இதன்போது அதற்கான இரண்டு இராணுவ படைப்பிரிவுகளை உருவாக்கி இருந்தான். இதன் ஒரு பிரிவை கிழக்கு மாகாணத்தின் ஊடாக அனுப்பி வைத்தான். அப்படைகள் சாகாமம் நகரைக் கைப்பற்றிய போது இங்கு சக்தி வாய்ந்த பத்தினித் தெய்வ கோயில் ஒன்று இருப்பதைக் கண்ட படைத் தளபதி கண்ணகியை (செண்பகச்செல்வி) வணங்கி தனது மன்னன் முதலாம் விஜயபாகு போரில் வெற்றி பெற வேண்டுமென்றும் அவ்வாறு மன்னன் வெற்றி பெற்றால் பத்தினித்தெய்வத்திற்கு நன் கொடைகள் தருவதாகவும் வேண்டிக் கொண்டான்.

அதனைத் தொடர்ந்து போரில் முதலாம் விஜயபாகு இலங்கையைக் கைப்பற்றினான். பின்னர் மன்னன் ஆலயத்திற்கு தலயாத்திரை ஒன்றினை மேற்கொண்டு நன்கொடைகளையும் தங்க மாம்பழம் ஒன்றினையும் பத்தினித் தெய்வமாகிய கண்ணகிக்கு வெற்றிக் காணிக்கையாக கொடுத்ததாக கிராமிய இலக்கியம் ஒன்று குறிப்பிடுகின்றது.

இவன் (விஜயபாகு!) தனது சகோதரி மித்தாவை பாண்டிய இளவரசனுக்குத் திருமணம் செய்து வைத்தான். இவன் கலிங்க வம்ச இளவரசி திரிலோக சுந்தரியை இரண்டாவது தடவையாகத் திருமணம் செய்தான். தூதுவர்கள் மூலம் பரிசுப் பொருட்களை அனுப்பி சாளுக்கிய அரச வம்சத்துடன் நட்புறவைப் பேணினான்.

இலங்கையின் பொருளாதார, பௌத்த சாசன வளர்ச்சிக்காக பர்மாவுடன் நல்லுறவை வளர்த்துக் கொண்டான். பர்மாவிலிருந்து பிக்குமாரை வரவழைத்து உபசம்பதாவிழாவை நடத்தினான். பொலநறுவையில் மூன்றடுக்கு தலதாமாளிகையை அமைத்தான். சிவனொளிபாத மலைக்குச் செல்லும்பாதையைச் சீரமைத்து சிவனொளிபாத மலைக்குக் கிராமங்களை வழங்கினான்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொழும்பில்...

காரைச் செலுத்திச் சென்ற 28 வயதுடைய செல்வராசா கஜேந்திரன் என்ற இளைஞர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

மன்னாரைச் சேர்ந்த குறித்த இளைஞர், பெற்றோருடன் தெஹிவளையில் வசித்து வந்தார் என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

காரில் அவர் மாத்திரமே பயணித்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பாரவூர்தியின் சாரதியைக் கைது செய்துள்ள பொலிஸார், விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## சுற்றுலா...

கத் தரவுகளுக்கு அமைய இந்த ஆண்டின் முதல் ஏழு மாதங்களில் சுற்றுலாப் பயணிகளின் வருகை கடந்த ஆண்டு முழுவதுமாக பதிவுசெய்யப்பட்ட மொத்த சுற்றுலாப் பயணிகளின் வருகையை கடந்துள்ளது.

இந்த ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதியிலிருந்து ஜூலை 27ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்குள், 2022ஆம் ஆண்டின் 12 மாதங்களை விட 4 சதவீத அதிக சுற்றுலாப் பயணிகளின் வருகையை பதிவு செய்துள்ளது.

கடந்த ஆண்டு 7 லட்சத்து 48 ஆயிரத்து 377 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வந்துள்ளனர்.

எனினும் இந்த ஆண்டு முதல் 7 மாதங்களில் சுமார் 7 லட்சத்து 50 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வந்துள்ளதாக தரவுகள் தெரிவிக்கின்றன.

அதேநேரம் கடந்த ஜூன் மாதம் நாட்டுக்கு ஒரு லட்சத்து 20 ஆயிரத்துக்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வந்துள்ளனர்.

இதன்படி, இந்த முதல் 7 மாத காலப்பகுதியில் 6 மாதங்களில் மாதாந்த சுற்றுலா பயணிகளின் வருகை ஒரு லட்சத்தை கடந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ம-7)

## அத்தியாவசிய...

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கூற்றுப்படி நாடு 2048இல் அபிவிருத்தி அடையும் என்றும் அதுவரை 25 வருடங்கள் மக்கள் துன்பப்பட முடியாது.

ஆனால் எம் தலைமையிலான குழுவினரால் நாட்டின் 03 அடிப்படைப் பிரச்சினைகளை மூன்று வருடங்களுக்குள் தீர்க்க முடியும். திருட்டை நிறுத்தி அரசாங்க வினைத்திறனை உருவாக்குவது இன்றியமையாதது.

திருட்டை நிறுத்துவதற்கும் நாட்டை வளப்படுத்துவதற்கும் வித்தியாசம் தெரியாதவர்கள் ஒரு நாட்டின் தலைவர்களாக இருக்க முடியாது.

அதன்படி மருத்துவம் மற்றும் மருத்துவமனை சேவை, உணவுப் பிரச்சினை, எரிசக்தி, போக்குவரத்து, மின்சாரம் ஆகிய பிரச்சினைகள் மூன்றாண்டுகளில் தீர்க்கப்படும் என தெரிவித்துள்ளார். (ம-7)

## வவுனியாவில்...

மாலை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதில் சோனமுத்து சரோனி (வயது -20) என்ற இளம் தாயே உயிரிழந்தவராவார்.

குறித்த பெண் 5 மாத குழந்தையின் தாயார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-7)

## மாகாண சபைத்...

உடனடியாக நடத்த வேண்டும் என இந்தியாவிற்கு விஜயம் செய்திருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி வலியுறுத்தியிருந்தார்.

இதன் பின்னணியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் சர்வகட்சிக் கூட்டம் இடம்பெற்ற போதிலும், 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவது தொடர்பில் எந்தவொரு இணக்கப்பாடும் அதில் எட்டப்படவில்லை.

மாகாண சபைத் தேர்தலை நடத்துமாறு தமிழ் கட்சிகள் வலியுறுத்திய போதிலும் ஜனாதிபதி அதற்கு மறுப்பு தெரிவித்திருந்தார்.

இவ்வாறான சூழலில் தமிழ் எம்.பிக்களை இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே நேற்று கொழும்பிலுள்ள இந்திய இல்லத்தில் சந்தித்து கலந்துரையாடினார்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், செல்வம் அடைக்கலநாதன், சாள்ஸ் நிர்மலநாதன், சி.சிறீதரன், கலையரசன், கோவிந்தம் கருணாகரம் ஆகியோர் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லேயை சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

இதன்போது அதிகாரப் பகிர்வு, உள்ளிட்ட பல விடயங்கள் குறித்து ஆராயப்பட்டதாக செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

நேற்றைய சந்திப்பின் பின் செய்தியாளர்கள் மத்தியில் கருத்து தெரிவித்த செல்வம் அடைக்கலநாதன் இவ்வாறு தெரிவித்தார்.

இதேவேளை, தமிழ் முற்போக்கு கூட்டணிக்கும் இந்திய தூதுவருக்கும் இடையில், எதிர்வரும் ஓகஸ்ட் 4ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை கொழும்பில் சந்திப்பொன்று இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய தூதுவரின் அழைப்பை ஏற்று நிகழும் இச்சந்திப்பில் த.மு.கூவின் அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொள்வார்கள் என த.மு.கூ தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார். (ம-7)

## 13வது...

உள்ளிட்ட பொருளாதாரம் சார்ந்த விடயங்கள் பேசப்பட்டதாகவும், 13ஆவது திருத்தத்தை உடனடியாக நடைமுறைப்படுத்தி, மாகாண சபை தேர்தலை நடத்துமாறு அறிவுறுத்தியதாகவும் தூதர் குறிப்பிட்டார்.

இதன்போது எப்படியான தீர்வை எதிர்பார்க்கிறீர்கள் என தூதர் கேட்டார்.

13ஆவதுதிருத்தத்தை இறுதி இலக்காக கொள்ளவில்லையென்றும், சமஷ்டி அடிப்படையிலான தீர்வை பெற விரும்புவதாகவும் குறிப்பிட்டார்.

இதேவேளை, திருகோணமலை மாவட்டத்தை தாம் அபிவிருத்தி செய்யவுள்ளதாக இந்திய தூதர் குறிப்பிட்டார். துறைமுகம், சக்தி, முதலீட்டு வலயம் ஆகியவற்றில் இந்தியா பங்களிக்கவுள்ளதாக தெரிவித்தார். (ம-7)

## 13ஆம் திருத்த...

வுள்ளார்.

இந்த அறிக்கையில் பொலிஸ் அதிகாரங்கள் தவிர்ந்த ஏனைய அதிகாரங்கள் எவ்வாறு பகிரப்படும் என்பது தொடர்பில் ஜனாதிபதி தெளிவுபடுத்தவுள்ளார்.

13ஆவது அரசியலமைப்பை நடைமுறைபடுத்த ஜனாதிபதி முயற்சித்து வருகின்ற போதிலும் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட தமிழ் கட்சிகளுக்கு இடையில் இணக்கம் காணப்படாதமையே ஜனாதிபதியின் பணிகளுக்கு தடையாக உள்ளதாக ஜனாதிபதி அலுவலகத்தின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-7)


மெகா பவர்
திகதி 01/08/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1541
K 25 27 36 67 77
26941

தன நிதானய
திகதி - 2023.08.01
சீட்டிழுப்பு இலக்கம் - 1223
N 26 39 72 76 N
05118

Lucky 7
திகதி 01.08.2023
சீட்டிழுப்பு இலக்கம் 019
L7 இலக்கம் 2 8
வெற்றி இலக்கினம் விருட்சிகம்
வெற்றி இலக்கங்கள் 0 7 4 9 7 5

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3435
சீட்டிழுப்பு திகதி 01.08.2023
Q 10 13 47 63
Q 53178

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.08.01
சீட்டிழுப்பு இலக்கம் 502
மேசம் 19 45 58 59 மேசம்

மஹஜன சம்பத
திகதி 2023/08/01
சீட்டிழுப்பு இலக்கம் 5193
W 3 8 5 9 6 7

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2167 வர்ணம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 2023.08.01 தினம் செவ்வாய்க்கிழமை
24 31 52 70 O
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 58,514,500.40
"இரண்டாம் வரம்" 12 19 63 64 E

சனிதா
திகதி 2023.08.01 வெற்றி வாரம் 4328 வர்ணம் பச்சை
02 13 23 48 P
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 52,871,504.00
"இரண்டாம் வரம்" 32 37 38 59 O

சசிரி
வெற்றி வாரம் 357
சீட்டிழுப்பு திகதி 2023.08.01
04 24 49
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 1,481,560/-

ராசி
சீட்டிழுப்பு வாரம் 3879 வர்ணம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2023.08.01 தினம் செவ்வாய்க்கிழமை
24 31 36 39 மீனம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 3,840,860/-
"இரண்டாம் வரம்" 12 13 41 54

கப்றுக
திகதி 01.08.2023 வெற்றி வாரம் 1343
H 04 17 28 30 31
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 423,236,504.20
"இரண்டாம் வரம்" 02 36 54 62 U
DLB தொலைபேசி 011-2 333 546-47 Web : www.dlb.lk

அத கோடிபதி ADA KOTIPATHI
செவ்வாய்க்கிழமை
வெற்றி வாரம் : 1993
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ 50,581,888/-
சீட்டிழுப்பு திகதி : 2023.08.01
09 19 38 56 S
"இரண்டாம் வரம்" 02 03 26 75 W


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விற்பனையாகின்றது...

# போட்டிப் பரீட்சைகளுக்கான வழிகாட்டி நூல்

நாடளாவிய சேவைகள் (SLAS, SLEAS, SLPS, SLSS, SLAcS) ஏனைய சேவைகள் (MSO, GS, Teaching, Banking) மற்றும் சட்டக் கற்கைநெறி (Law College) போட்டிப் பரீட்சைகளுக்கானது.




புதிய பரீட்சை மாற்றங்களுக்கு அமைய முற்றிலும் எதிர்பார்க்கையுடனான சகல பாடங்களுக்குமான ஐம்பது (50) மாதிரி வினாத்தாள்கள் மிக விரிவான விடைகளுடன்...

P.உமாசங்கர்
(பிரபல எழுத்தாளர்) (16396)

பிரபல புத்தகசாலைகளில் கிடைக்கப் பெறும்



VILLAGE HOTEL JAFFNA EXPRESS
யாழ் - கொழும்பு பஸ் சேவை
AIRPORT PICK UP DROP SERVICE
அன்னை முத்துமாரி பஸ் சேவை இனி வரும் காலங்களில் VILLAGE HOTEL எனும் பெயரில்...
கட்டணம் - 2800/= (16349)
T.P: 077 544 8503



WORK IN UK
WORK PERMITS
CONSTRUCTION WORKERS
- 5 YEAR WORK PERMITS
- குடும்பத்தவர்களை உடன் அழைத்துச்செல்லும் வாய்ப்பு
- 5 வருடங்களின் பின் நிரந்தர வதிவிடவுரிமை (Permanent Resident)
- ✓ BRICK LAYERS ✓ SHUTTERING CARPENTERS
- ✓ SHUTTERING JOINERS ✓ STEEL FIXERS
- ✓ ELECTRICIANS ✓ PLUMBERS
- ✓ STEEL ELECTORS FOR STRUCTURES

போன்ற துறைகளில் வேலைசெய்பவர்களுக்கு பொருத்தமான உடனடி வேலை வாய்ப்புகள்
மாணவர்களும், கட்டுமானத்துறையினர் ஆர்வமுள்ளவர்களும் விண்ணப்பிக்கலாம்
CIMS COLLEGE 0777-068-777



CANADA VISITOR VISA
VISITOR VISA வில் கனடா செல்வதற்குரிய ஆலோசனைகள் மற்றும் Online விண்ணப்பங்கள் விரைவாக செய்து தரப்படும்
CIMS COLLEGE (C-6996)
0777-068-777
49A, சப்பல் லேன், யாழ்ப்பாணம்
V2 TRAVELS


# ஐ.தே.க வின் கூட்டம் இன்று

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி சம்மேளனம் தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுப்பதற்கான செயற்குழுக் கூட்டம் இன்று கட்சியின் தலைவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் சிறிகொத்தாவில் இடம்பெறவுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் 76வது ஆண்டு நிறைவு மற்றும் கட்சி மாநாட்டை எதிர்வரும் செப்டெம்பர் 10ஆம் திகதி நடத்துவதற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் முகாமைத்துவக் குழு எடுத்த தீர்மானம் இன்று நடைபெறவுள்ள செயற்குழுக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட உள்ளதாக கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.

(ம-7)


வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
ஆகாஸ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (16550)
076 825 7716 (ஆகாஸ்)



TECHNO WORLD
தொழில்நுட்பக் கல்லூரி
(வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை, யாழ்)
புதிய பிரிவு A/L 2025
- பொறியியல் தொழில்நுட்பவியல்
- உயிர்முறைமைகள் தொழில்நுட்பவியல்
- தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம்
- ICT, விவசாயம், புவியியல், கணிதம், சித்திரம்

திகதி: 05.08.2023 (சனி) ஆரம்ப நேரம்: 8.30 am
தொடர்புகளுக்கு: 077 017 5346 (C-6994)


# மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 01 . 07 . 1952 | 01 . 08 . 2023 |

## இளையவன் செல்வரட்ணம்

சண்டிலிப்பாய் வடக்கு உலாக்காவளையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இளையவன் செல்வரட்ணம் அவர்கள் 01.08.2023 அன்று காலமானார்.

அன்னார் இளையவன் - நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும் நாகேஸ்வரியின் அன்புக் கணவரும் சதீஸ்வரன்(விஜயன்), சதீஸ்வரி, சிவாஜினி, யசோதா (டென்மார்க்), பார்த்தீபன்(மணி), ஐங்கரன்(கரன்), பாஸ்கரன்(பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் பகீரதி, ஜேசுராசா, சசிகரன், செல்வன், நிதியா, பரினா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் சாந்து, சாலி, நிசாந்தன், சரண்யா, சுமி, பிறின்சி, யதுஷன், லதுஷன், ஜனகா, கிருஸ்மிகா ஜெய்சன்(டென்மார்க்), யபிசன், அபிராமி ஆகியோரின் பாசமிகு பேரனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 02.08.2023 புதன்கிழமை மு.ப 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக அளவெட்டி கொட்டுப்பனை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
(C-6995)


# வடஇந்தியா, காசி, சீரடி, திருப்பதி யாத்திரை

| ஆரம்பம் : | நாட்கள் : | யாத்திரிகர் : |
|---|---|---|
| 15.09.2023 | 16 | 15 |

**செல்லுமிடங்கள் சுருக்கமாக: டெல்லி:** நாராயணர் கோவில் மற்றைய இடங்கள் சுற்றிப்பார்த்தல், **ஆக்ரா,** தாஜ்மகால், மாதுர, கிருஸ்ண ஜென்மபூமி பிரேம்மந்திர் தரிசித்தல், **அலகாபாத்,** கங்கா, ஜமுனா, சரஸ்வதி, திருவேணிசங்கமம் வேறு இடங்களும் காணலாம். கயா காலமானவர்களுக்கும் சிரார்த்தம் செய்யும் இடம் அகால மரணமானவர்களுக்கும் சேர்த்து செய்யலாம். புத்தகயா, பல நாடுகள் கட்டிய புத்தாலயங்கள், **சீத்தாமடி,** சீதை தாயாருடன் பூமிக்குள் புதையுண்ட இடம் காசி விஸ்வநாதர் உட்பட்ட 15 இடங்கள் காசியில் தரிசிக்கலாம் அத்துடன் **கங்காபூசையும்** காணலாம். 3 நாட்கள் காசியில் தங்கல் பின்பு **மும்பாய்,** சீரடிபாபா தரிசனம் சனிசிங்கனாப்பூர், சனிபகவான் கோவில், திரியம்பகேஸ்வரர் ஜோதிலிங்க தரிசனம் வேறு இடங்களும் காணலாம். பின்னர் **இராமேஸ்வரம்** தீர்த்தமாடி காசியாத்திரை நிறைவு பின்னர் நவபாஷணம், உத்திரகோசமங்கை சிவன் ஆலயம், திருப்புலானி தரிசித்து மதுரைமீனாட்சி சுந்தரேஸ்வரர் தரிசனம் முடித்து **திருப்பதி,** காளகஸ்திரி, அலமேலுமங்கா, திருத்தணி தரிசனம் முடித்து **சென்னை** வருகை 1 நாள் சென்னையில் சொப்பிங் முடித்து 01.10.2023 நாடுதிரும்பல்.

பெற்றுக்கொள்ளும் ரூபாவிற்கு எமது சேவை : 5 விமானப் பயணச்சீட்டு, மூன்று வேளை மடப்பள்ளி ஆட்கள் சமைத்த சுத்தமான சைவ உணவு, 2 பேருக்கு கட்டில் மெத்தை, வெஸ்ரன் கொமட் குளியலறை இணைந்த அறைகள், காப்பி, ரீ, குடிநீர், (மினரல் வாட்டர்), யாத்திரிகை முழுவதும் AC வாகன வசதி வீட்டிலிருந்து விமான நிலையம் செல்லவும் திரும்ப வீட்டிற்கு வரவும் வாகன வசதி (யாழ் கொழும்பு யாழ்) வாகன வசதி செய்து தரப்படும். விபரங்களை கேட்டறிந்து பதிவு செய்யவும். (16344)

குறைந்த கட்டணம் "வந்தவரை கேளுங்கள் சென்றுவரலாம் வாருங்கள்"
நிறைவான தரிசனம் " பூரண பாதுகாப்பான யாத்திரைப் பயணம்"

கலாநிதி T.ஸ்ரீரெங்கநாதன் மகன்: ராஜன்
Office: City Center Shopping Complex 3rd Floor, No.59,3/6, Sea Street, Colombo-11
Email : sriranganathan2601@gmail.com
Facebook : sridevisriranganathan thuraiappa
Tel : 077 768 0102, 077 736 2154


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.08.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org